அறைவு 02 இயம் 24 January 25 - 31, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்



## அமெரிக்காவின் புத்தாக்க துப்பாக்கி

உலக ஆயுத வியாபாரத்தில் முன்னணியில் இருக்கும் அமெரிக்கா அதிநவீன சுடுகலன் ஒன்றின் அடிப்படை மாதிரியைப் பரீட்சித்துப் பார்த்துள்ளது.

தன்னிச்சையாகக் குறிபார்க்கக் கூடியவாறு இச்சுடுகலன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இச் சுடுகலனைக் கொண்டு குறிபார்க்கும் வீரர் தான் தாக்க நினைக்கும்...... 13

### தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டனர் – 'பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் சங்கம்'

# ஆசிரிய நியமனத்தில் முறைகேடா?

கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனத்தில் தகுதி புறக்கணிக்கப் பட்டிருப்பதாக பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் சங்கம் முறையிட்டுள்ளது.

கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுதப்பட்டுள்ள முறைப்பாட்டுக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ள 27 முஸ்லிம் பட்டதாரிகள் தம்மைவிடக் குறைவான கல்வித் தகுதியைக் கொண்டவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இக் கடிதத்தில் கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர் நியமனம் தொடர்பாக கடந்த 2013.12.11ஆம் திகதி வீரகேசரி பத்திரிகை விளம்பரப்படி நாங்கள் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு 2013.12.23ஆம் திகதி தோற்றினோம்.

பின்னர் அதற்கான நியமனம் 2014.01.15ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்டது. இதன்படி...... 13



## தடயங்களைத் தற்போதுவரை தராத மன்னார் புதைகுழி



"மன்னார் திருக்கேதிஸ்வரம் மனித புதை குழியில் இருந்து மீட்கப்பட்டு வரும் மனித எச்சங்கள், எலும்புத் தொகுதிகளை வைத்து, மரணம் சம்பவித்த விதத்தினை அறிந்து கொள்ள நீண்ட நாட்கள் எடுக்கும் என அனுராதபுரம் வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் வைத்தியரெட்ண கருத்தறிவித்துள்ளார்.

அம் மனிதப் புதைகுழியின் எல்லைகளைக் கூட தற்போதுவரை வரையறுக்க முடியாதுள்ளதாக தெரிவித்துள்ள அவர் குறித்த மனித

### "நான் நிரபராதி" - சோலையடி கி. அ. ச தலைவர்



என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் யாவும் ஆதாரமற்றவை எனத் தெரிவித்துள்ள சோலையடி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தன்னை நிரபராதி எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அவர் மீது பராயமடையாத பெண் ஒருவரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு

## மரணதண்டனை



மட்டக்களப்பு கொம்மாந்துறையைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு துபாயில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

துபாய் நாட்டவர் ஒருவரைத் தனது கவலையீனமான வாகனச் செலுத்துகையால் கொலை செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இவருக்கு கடந்த 21ம் திகதி 13

## ஆளு னரைச் சந்தித்த ஆஸி சட்டமன்ற உறுப்பனர்கள்



கிழக்கிற்கு வருகை தந்திருந்த அவுஸ்த்திரேலிய விக்டோரியா சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐவர் கிழக்கின் ஆளுனரைக் கண்டு கலந்துரையாடியுள்ளனர். கிழக்கின் தற்போதைய நிலைமைகளைச் சரியாக விளங்கிக்கொள்ளும் வருகையாக இதனை கருதலாம் எனத் தெரிவித்துள்ள கிழக்கு மாகாணசபைச் செய்திகள் கிழக்கில் யுத்தத்தின் பின் கல்வி, பொருளாதார, சுகாதார விவசாய மற்றும் வர்த்தகத் துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

மலைமுரசில்
கணித ஆசிரியர் ரி. குமணன் அவர்களின்
1000 கணிதக் கேள்வி பதில்கள்
புலமைப் பரிசில் ஆசிரியர் ந. மனோகரனின்
கேள்வி பதில்கள்
பிரதிக்கு முந்துங்கள்

### இலங்கையின் மனித உரிமையில் ஓர் சாதக மாற்றம்

# "மாணவக் கொலைச் சந்தேக நபர்களின் கைது"

**மனித உரிமைக் கண்காணிப்பு மையம்**

திருகோணமலையில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின் கொலையுடன் சம்பந்தப்பட்ட கொலைச் சந்தேகநபர்கள் பன்னிருவரின் கைதானது இலங்கையின் மனித உரிமை நிலைமைகளில் நிகழ்ந்த ஓர் சாதக மாற்றமாகவே கருதப் படுகின்றது என சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஆனால் " இலங்கையின் மனித உரிமை முன்னேற்றத்திற்காகவும், பொறுப்புக் கூறலுக்காகவும் போரின் பின்னர் சர்வதேசம் இன்று வரை காத்துக் கொண்டிருக்கின்றது'' என்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ)

### சுகிர்தராஜன் கொலையாகி வருடங்கள் 8

ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜன் கொலை செய்யட்டு 8 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இன்றுவரை கொலையாளிகள் எவரும் ........ 13




## திருமலை மாவட்ட அபிவிருத்திக்கு 594 மில்லின் ஒதுக்கீடு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் திருகோணமலை மாவட்டத்திற்கு 2014ம் ஆண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு 594 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் திவிநெகும திட்டத்திற்கு 60 மில்லியனும், கமநெகும விற்கு 231 மில்லியனும், கிராமிய வீதி, பாலங்களின் அபிவிருத்திக்கு 90 மில்லியனும், காட்டுயானைப் பாதுகாப்பிற்கு 75 மில்லியனும், கிராமியப் பாடசாலை அபிவிருத்திக்கு 120 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப் பட்டிருப்பதுடன் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென 120 மில்லியன் ரூபாய்கள் விசேட ஒதுக்கீடாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இவ்வொதுக்கீடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப் பட்டுள்ளது.

## கிழக்கு மாகாணசபை அமர்வுத் திகதிகள்

2014ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாணசபையின் அமர்வுத் திகதிகள் வெளியாகியுள்ளன. அதன்படி சனவரி 28,29- பெப்ரவரி, மார்ச் 18,19- ஏப்ரல் 22,23- மே 27,28 - ஜூன் 17,18 - ஜூலை 15, 16- ஓகஸ்ட் 19,20- செப்டெம்பர் 23,24- ஒக்டோபர் 28,29- நவம்பர் 18,19- டிசம்பர் 8,9, 10,11 ஆகிய திகதிகளில் அமர்வுகள் நடைபெறும் என கிழக்கின் பேரவைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (சிவா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071

## வணக்கம்

## கிழக்கின் நியமனங்கள் ஏற்படுத்தும் எதிர்வினை

கிழக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் தொடர்பான அதிருப்தி பரவலாக எழுந்து வருகின்றது.

அவ் அதிருப்தியானது இனங்களுக்கிடையிலான இடைவெளிகளை மேலும் அகலப்படுத்துவதாக அமைவதுடன் ஒரே இனத்துக்கிடையேயான பிரதேச வேறுபாடுகளை ஊக்குவிப்பதாகவும் அமைகின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

அண்மையில் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரைத் தலைமைப் பதவியில் அமர்த்த ஆளுனர் இட்ட கட்டளையினை கிழக்கு மாகாண தமிழத் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள் தார்மீக அடிப்படையில் எதிர்த்திருந்தனர். கிழக்கு மாகாணத்தின் அமைச்சர்கள் தொடக்கம் அதிகாரிகள் மட்டம் வரைக்கும் குறித்த ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை கோடிட்டுக் காட்டிய த.தே.கூ அதனைக் கருத்திற் கொள்ளுமாறு கேட்டிருந்தது.

அடுத்து மாகாண கல்வி அமைச்சால் நேர்முகப் பரீட்சையின் மூலம் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களின் போது முஸ்லிம் இனத்தவர்களிடையே பிரதேச பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனை உறுதிப்படுத்தும் முகமாக சுமார் 27 பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் கடிதமொன்றை அனுப்பி வைத்திருப்பதுடன் அக் கடிதத்தில் யாராருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அவர்கள் எந்தெந்தப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதையும் குறிப்பிட்டு உள்ளனர்.

தற்போது மிகப் பெரும் நெருக்கடி நிலையாக கிழக்கில் நியமனங்களின் போது இனவிகிதாசாரம் பின்பற்றப்பட வேண்டும் என்ற கட்டளை மறைமுகமாக இடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைச் சிரமேற்கொண்டு கிழக்கு மாகாண அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிகின்றது. மொத்த இனக் குடித்தொகையில் எத்தனை வீதமான அரச பதவிகள் குறித்த இனத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்து அதன் பின்னர் தற்போது அவ்வினத்தைச் சார்ந்த எத்தனைபேர் பதவியில் இருக்கின்றார்கள் என்பதைக் கழித்து எஞ்சிய தொகை இருப்பின் அவற்றிற்கே புதியவர்களை நியமிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது எனத் தெரிகின்றது.

இவையாவும் சர்வதேச மட்டத்தில் . இலங்கையின் நடவடிக்கைகளை எதிர்த்திசை நோக்கி நகர்த்த வல்லவை என்பதை புரிந்து கொண்டால் நலம்.....

## சர்வாதிகாரிகள் பலருக்கு நடந்ததை மனதிற் கொள்ள வேண்டும் - வடமாகாண முதல்வர்

ஜனாதிபதிக்கு காலம் கனியும் வரையிலும் எம்மால் காத்திருக்க முடியாது. அடுத்த தேர்தலை மனதில் கொண்டு அரசாங்கம் பிழையான வழியில் செல்கின்றது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது நான் சந்தித்தேன். அன்று என்னிடம் கேட்பதை கொடுப்பேன், பிரதம செயலாளரை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று கூறினார். இதுவரையிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

வலி. தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரப் பரிசளிப்பு விழா அப்பிரதேச சபையில் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

“2009இல் நடத்துவதாகக் கூறிய வடமாகாண சபைத் தேர்தலை இழுத்தடித்து வந்து, பின்னர் இந்தியாவின் நெருக்குதல் காரணமாக 2013இல் நடத்தினார். அத்துடன், அத்தேர்தலில் இராணுவத்தினர் உதவியுடன் வென்றுவிடலாம் எனவும் எண்ணியிருந்தார். எனினும், அது எதிர்விதமாக அமைந்தது. இதனை ஜனாதிபதியினால் பொறுக்க முடியவில்லை. சொல்வது ஒன்று செய்வது இன்னொன்றாகத் தனக்கே பழக்கமான முறையில் நடக்கத் தொடங்கினார்.

ஆற்றின் அடுத்த புறத்தில் இருப்பவர்களை நம்பக்கூடாது என்று தெற்கிலுள்ள சிங்கள மக்களே கூறுவர். எமது ஜனாதிபதி ஆற்றின் அடுத்த பக்கத்தில் பிறந்து வளர்ந்தவர் என்றும் அவர் தெரிவித்தார்.

கேட்பதைத் தருவதாக கடந்த 2ஆம் திகதி உற்சாகமாகக் கூறிய ஜனாதிபதி, அதனையெல்லாம் நிராகரித்து விட்டு கேட்காதவற்றைத் தருவதாகப் பேரம் பேசினார். அதுவும் சட்டத்திற்குப் புறம்பாக நடந்துகொள்கின்றோமோ? என்பதை அறிந்தும் அறியாதது போல நடந்துகொள்கின்றார். இதனால், ஏற்படப்போகும் பாதிப்புக்களுக்கு அவரே முகம்கொடுக்கவேண்டும்.

நாங்கள் நாளை நீதிமன்றங்களை நாடலாம். என்ன அடிப்படையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கருத்தொருமிப்புக்கு மாறாக அலுவலர் (பிரதம செயலாளர்) ஒருவர் பதவியில் தொடர்ந்திருக்கின்றார் என்ற கேள்வி நீதிமன்றங்களைக் கேட்ட வைக்கலாம். இருந்தும், அவையல்ல எமக்கு முக்கியம் என்றும் அவர் கூறினார்.

தமிழ் மக்களை இன ரீதியாகப் படுகொலைக்கு ஆளாக்கியது அரசாங்கம் என்று அகில உலகமும் கூறும்போது, அவர்களின் இன்றைய மாகாண சபைக்கு எதுவுமே வழங்கமாட்டோம் என்று ஜனாதிபதி அடம்பிடிக்கின்றார் என்றால் அதற்குக் காரணம் இருக்க வேண்டும்.

தமிழருக்கு எதுவும் கொடுக்கவில்லை, மறுத்துவிட்டேன் என்று கூறினால்தான் வரப்போகும் தேர்தலில் தனக்குச் சிங்களவர்களின் வாக்குகள் கிடைக்கும் என்று ஜனாதிபதி எண்ணுகின்றார் போல தெரிகின்றது.

அத்துடன், ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகள் அவருக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றன. மேலும் மேலும் அதிகாரத்தை தம்வசப்படுத்தும் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அவரைச் சர்வதிகாரி என்று அடையாளம் காட்ட அனுசரணையாக இருந்து வருகின்றன. அண்மைக் காலங்களில் அதிகாரங்கள் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும் என்றே சகல நாடுகளிலும் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

எப்பொழுதும் அதிகாரங்களை தனிப்பட்டவர்கள் அல்லது குடும்பங்கள் அல்லது கட்சிகள் அல்லது இராணுவம் தம்வசம் பதுக்கிப் பாதுகாக்க எத்தணிக்கின்றனவோ அது ஈற்றில் கவலையையே அவர்களுக்கு உண்டாக்கும். அண்மைக்காலத்தில் அவ்வாறு சர்வதிகாரிகளாக மாறிய நபர்கள் பலர் இறுதியில் தமது தவறுகளை உணர்ந்து கொள்ளும் படியாக நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

எகிப்தின் ஹொஸ்னி முபாரக், பாகிஸ்தான் பெளரவ் மு'க்ரவ், ஈராக்கின் சதாம் ஹுசேன் எவ்வாறு தமது தவறுகளை உணர்ந்து கொண்டார்கள் என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆட்சி செய்த நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையையும் அவருக்கு உலகம் ஈர்த்த மதிப்பையும் ஆட்சியாளர்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்“ என்றார்.

## விஸ்ணுபுரம் விருது பெறும் இலங்கையின் இலக்கிவான் தெளிவத்தை ஜோசப்

(படப்பிடிப்பு- சென்னையில் இருந்து அ.யேசுராசா)



## “கருணாவைப் பிரித்தது நாம் தான்”

### - ஐ.தே.க-

கருணாவை பிரித்து விடுதலைப் புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தி யுத்தத்தை வெற்றி பெறுவதற்கு ஐ.தே.கட்சி அரசாங்கமே அடித்தளமிட்டது. என ஐ.தே.கட்சி குருநாகல் மாவட்ட எம்.பி. அகிலவிராஜ் காரியவசம் இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எமது அரசாங்கம் அன்று கலைக்கப்படாமல் இருந்திருந்தால் மன்னாரிலிருந்து தமிழ் நாட்டுக்கு பாலம் அமைத்து உள்நாட்டு வருமானத்தை அதிகரித்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வாழ்க்கை செலவு அதிகரிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீது உரையாற்றும் போதே அகிலவிராஜ் காரியவசம் எம்.பி. இதனை தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உடையாற்றுகையில்,

விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டு கருணா அம்மானை அவ்வியக்கத்தில் இருந்து பிரித்து புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தி யுத்தம் வெற்றி பெறுவதற்கான அடித்தளத்தை ஐ.தே.கட்சியே போட்டது.

அதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் யுத்தம் வெற்றி பெறச் செய்யப்பட்டது.

மன்னாரில் விமான நிலையம் அமைப்பதற்கும் மன்னாரிலிருந்து தமிழ் நாட்டுக்கு பாலம் அமைத்து அங்கிருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் பயணிகளை இங்கு அமைக்கப்படும் விமான நிலையத்திற்கு கொண்டு வருவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டது.

இதன் மூலம் நாட்டுக்கு பாரிய வருமானம் கிடைத்திருக்கும் இவ்வாறானதொரு நிலையிலேயே எமது அரசாங்கம் கலைக்கப்பட்டது என்றார்.

## கிண்ணியா வரவேற்புக் கோபுரப் பணிகள் மீள ஆரம்பிக்கும் - நகரசபைத் தலைவர்

கிண்ணியா நகர ஆரம்பத்தில் அமைக்கப்பட்டு வந்த வரவேற்புக் கோபுரப் பணிகள் ஆண்டுகளாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

ஒரு மதத்தைச் சார்ந்த வகையில் அவ் வரவேற்புக்கோபுரம் அமைக்கப்பட்ட வருவதாக மேற்கொள்ளப்பட்ட புகாரினை அடுத்தே இவ் வரவேற்புக் கோபுரக் கட்டுமாணப் பணிகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து பல சந்தர்ப்பங்களில் கிண்ணியா நகரசபையின் பிதா அவ் வரவேற்புக் கோபுரக் கட்டுமாணப் பணிகளை முன்னெடுப்பதற்காக மேற்கொண்ட பிரயத்தனங்கள் வெற்றியளிக்கவில்லை.

எனினும் தற்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நகரபிதாவால் மேற் கொள்ளப்பட்ட பிரேரணைக்கு நிபந்தனையுடன் கூடிய அனுமதி கிடைக்கப்ப பெற்றுள்ளது.

எந்த ஒரு மதத்தையும் சாராத வகையில் அவ்வளைவுக் கோபுரம் அமைக்கப்பட வேண்டும் என்பதே அந் நிபந்தனை என நகரபிதா ஹில்மி மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## – மரணதண்டனையாளனின் மறு பக்கம் –

தன்னுடைய மகனை ஓரின சேர்க்கையில் ஈடுபடுத்த முனைந்ததன் காரணமாகவே கொலையாளியாக் கப்பட்டு கொல்லப்பட்டுள்ளான் என டூபாயில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கிருஸ்பிள்ளையின் தாயார் தெரிவித்தார்.

தனது மகனை காப்பாற்ற யாரும் முன்வராத நிலை தொடர்பிலும் தாயார் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டு காரினால் ஒருவரை மோதி கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 21ஆம் திகதி அதிகாலை சுட்டுக்கொலை செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட கொம்மாதுறையினை சேர்ந்த கிருஸ்ணபிள்ளை ரவீந்திரன் நிரபராதியென அவரது தாயார் நாகரெட்னம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறையானது மட்டக்களப்பு வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதியில் வந்தாறுமூலையில் உள்ள கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அடுத்ததாகவுள்ள கிராமமாகும்.

மிகவும் வறிய மக்கள் வாழும் கிராமமான இங்கிருந்து அதிகளவான இளைஞர் யுவதிகள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிந்துவருகின்றனர்.

இங்கு கிருஸ்ணபிள்ளை-நாகரெட்னம் தம்பதியினரின் மூன்றாவது பிள்ளையாக ரவீந்திரன் இருந்துவருகின்றார். இவர்கள் குடும்பத்தில் 11 பிள்ளைகள். இவர்களில் ஒருவர் 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பகுதியில் செயற்பட்ட ஆயுதக்குழுவினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மூத்த பெண் மத்திய கிழக்கு நாடொன்றில் 1990ஆம் ஆண்டு கடமையாற்றிவந்த நிலையில் வீட்டில் சிலிண்டர் வெடித்து உயிரிழந்துள்ளார்.

தங்களது வீட்டின் வறுமை நிலைமை காரணமாகவே தங்களது

எந்த தாய்க்கும் ஏற்படாத நிலையெனவும் தெரிவித்தார்.

கடந்த ஐந்தாம் திகதி டூபாய் சென்று சிறையில் தனது மகனை சந்தித்தபோது தான் நிரபராதியெனவும் தன்னைக்காப்பாற்றும்படியும் எங்களிடம் மன்றாடினார். தன்னை தனது எஜமானாரும் வேறு மூவரும் இணைந்து பாலைவனப்பகுதிக்கு அழைத்துச்சென்று அங்கு அவர்கள் மது அருந்திக்கொண்டிருந்தபோது தன்னை ஓரின சேர்க்கைக்கு அழைத்ததாகவும் அவர்களிடம் இருந்து தப்புவதற்காக காரை எடுத்து ஓட முயன்றபோது இந்த விபத்து சம்பவம் நிகழ்ந்ததாகவும் தெரிவித்தார்.

அவரை கைதுசெய்த பொலிஸாரிடமும் இதனை தெரிவித்துள்ளார். ஆனால் இவருக்கு பத்து வருடங்கள் சிறைத்தண்டனை என்றே தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் அவை திடீரென மாற்றப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யாரோ தொலைபேசி அழைப்பு மூலம் வழங்கிய அழைப்பின் மூலமே தனக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளதாக தனது மகன் தெரிவித்ததாகவும் தாயார் தெரிவித்தார்.

இதேவேளை சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினரை சந்தித்து மன்னிப்புக்கோரி தனது சகோதரனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறுத்தலாம் என்று உயிரிழந்தவரின் குடும்பத்தினரை சந்திக்க முயற்சிசெய்தபோதும் நாங்கள் ஏமாற்றப்பட்டோம் என மரண தண்டனை விதிக்கப்பட்டு உயிரிழந்த ரவீந்திரனின் சகோதரியான கோமளாவதி என்பவர் தெரிவித்தார்.

எனது சகோதரன் எமது குடும்ப நிலைமை காரணமாகவே வெளிநாட்டுக்காக தொழிலுக்காக சென்றார். இன்று அவரது மனைவியினைக் கூட அவரது சடலத்தினை பார்க்க அனுமதிக்க வில்லை. இந்த கொலையில் எங்களுக்கு அநீதி இழைக்கப்



பிள்ளைகளை வெளிநாடு அனுப்பினோம். ஆனால் அவர்கள் பிணங்களாக திரும்பியமை தமக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக உயிரிழந்தவரின் தாயார் தெரிவித்தார்.

தனது மூத்த மகள் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் வீட்டு பணிப்பெண்ணாக கடமையாற்றிய வேளையில் அந்த வீட்டில் இருந்து காஸ் சிலின்டர் வெடித்து உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. அவரது சாம்பலைக்கூட நாங்கள் காணவில்லை. அவரை இழந்து நின்ற நாங்கள் இன்று எமது மகனையும் இழந்து அவரின் சடலத்தினையும் காணமுடியாதது வேறு

பட்டுள்ளது. இது தொடர்பில் பல்வேறு தரப்பினரிமும் முறையிட்டும் எமக்கு நீதி கிடைக்கவில்லை. எங்களது சகோதரனின் உடலையாவது இங்கு கொண்டுவர நடவடிக்கையெடுக்க வேண்டும். இது தொடர்பில் பல்வேறு தரப்பினரிடமும் முறையிட்டுள்ளோம். ஆனால் எதுவித சாதகமான பதில்களும் கிடைக்கவில்லை. எங்கள் சகோதரனின் முகத்தினை கடைசி ஒரு தடவையாவது பார்க்க ஏற்பாடுகளை செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

(நன்றி-வீரகேசரி இணையம்)

## போர் முடிந்தது-ஆனால் பிரச்சனை தீரவில்லை

போர் முடிவடைந்த போதும் வடக்கில் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலையில் மக்கள் இப்போதும் உள்ளார்கள். இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே.சிசன்.

நாகர்கோவிலில் நேற்று இடம்பெற்ற மீனவர்களுக்கு இயந்திரப் படகுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

## சர்வாதிகாரியாக சனாதிபதி - சி.வி.வி

இவ்வருடம் மார்ச் மாதத்தில் சர்வதேச ரீதியாக கேள்விக்குட்படுத்தப்படப் போகும் இலங்கை அரசாங்கம் அடுத்த தேர்தலை மட்டும் மனதில் எடுத்து சட்டத்திற்குப் புறம்பான வழியில் நடக்க முனைந்துள்ளது. மேலும் மேலும் அதிகாரத்தை தம்வசப்படுத்தும் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அவரை சர்வாதிகாரி என்று அடையாளங்காட்ட அனுசரணையாக இருந்து வருகின்றன என வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாண்புமிகு ஜனாதிபதி தாம் விரித்த வலைக்குள் தானே அகப்பட்டுத் திண்டாடுகின்றார் என்பது தற்பொழுது புரிகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஏற்றுமதி நுழைவாயிலாக இலங்கை

இலங்கை இன்று நிலையான பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேலோங்கி நிற்கின்றது. பொருளாதாரம் கடந்த சில ஆண்டுகளில் 6 முதல் 8 சதவீதமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இத்தகைய செயற்பாடுகளின் மூலம் இலங்கை மத்திய கிழக்கு, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதிக்கான நுழைவாயிலாக அமைந்திருக்கிறதென்று இலங்கைக்கான ஜப்பானியத்தூதுவர் நுபுஹிட்டோ ஹோபோ பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் 21ஆவது வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய ஜப்பானியத் தூதுவர், இன்று உலகின் பொருளாதாரம் ஆசிய நாடுகளின் பக்கம் சாதகமாக திரும்பியிருக்கிறது. இதனால், இலங்கையின் ஏற்றுமதித்துறை சிறந்த வளர்ச்சியடைந்து நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு உந்து சக்தியாக அமையுமென்று வலியுறுத்திய ஜப்பானியத்தூதுவர், இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாடு உலகிலுள்ள செல்வாக்குமிக்க வர்த்தக பிரமுகர்களின் கவனத்தை இலங்கையின் பக்கம் திருப்புவதற்கு உதவியிருக்கிறதென்றும் தெரிவித்தார்.

## சிறுவர் துஸ்பிரயோகத்தைத் தெரிவியுங்கள்

**அரசிற்கு 1929 – மலைமுரசிற்கு 0754252042**

## ஆலையடி வேம்பில் நாவலர் பாடசாலை

ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள நாவலர் பாலர் பாடசாலையின் அங்குரார்ப்பண வைபவம் இன்று 20-01-2014, திங்கட்கிழமை நண்பகல் அதன் தலைவர் வி.சந்திரசேகரம் தலைமையில் இந்துமாமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பாலர் பாடசாலையினை அங்குரார்ப்பணம் செய்துவைத்த இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலகத்தின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் எஸ்.கனகரெத்தினம், அம்பாறை மாவட்ட முன்பள்ளிக் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் ஜனாப்.இப்றாஹிம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் திருக்கோவில் வலயக்கல்விப் பணிமனையின் முன்பள்ளி இணைப்பாளர் எஸ்.தர்மபாலன், இறைபணிச் செம்மல் ரி.கைலாயபிள்ளை, ஆலையடிவேம்பு பிரதேச செயலக முன்பிள்ளைப்பராய அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.உஜெயந்தன், கலாசார உத்தியோகத்தர் திருமதி.என்.தேவராஜ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். (உதயகாந்த்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெனீவாவில் அமெரிக்காவை மடக்க இலங்கை வைத்துள்ள ஆயுதம்

சஞ்சயன்

ஜெனிவாவில் மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத்தொடரில், இலங்கைக்கு எதிரான மற்றொரு தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்து வருகின்றன.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் இந்த தீர்மானத்துக்கு முக்கியமான காரணமே, போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்பது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகினது கண்டிப்பான நிலைப்பாடாக உள்ளது.

நம்பகமான - சுதந்திரமான பொறுப்புக்கூறும் முயற்சிகளை உள்நாட்டிலேயே முன்னெடுக்குமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த மேற்குலகம், இப்போது தமது கருத்துக்கு இலங்கை அரசாங்கம் மதிப்புக் கொடுக்கத் தயாராக இல்லை என்பதை மெல்ல மெல்ல உணர ஆரம்பித்துள்ளது.

மேற்குலகின் கருத்துகளைப் புறக்கணிப்பது என்பது இலங்கையின் கொள்கையல்ல, ஆனால், படையினருக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை. அதாவது போரில் வெற்றியீட்டித் தந்த படையினரை நீதிமன்றத்தில் நிறுத்த முடியாது என்பதே அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது.

அந்தக் கொள்கையை அரசாங்கம் உறுதியாக கடைப்பிடிக்க விரும்புவதால் தான், மேற்குலகுடன் விரோதப்போக்கை கடைப்பிடிக்க நேரிடுகிறது. அதனால் தான் மேற்குலகின் அழுத்தங்களுக்கும் உள்ளாகிறது.

சில நாட்களுக்கு முன்னர், கண்டியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய, மனிதஉரிமை விவகாரங்களுக்கான இலங்கை அரசின் முதன்மைப் பிரதிநிதியாக செயற்படும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஜெனிவாவில் எத்தகைய சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும், படையினரைக் காட்டிக் கொடுக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் ஈடுபட்ட படையினர் ஒருபோதும், தவறுகளை இழைக்கவில்லை என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

அண்மையில், இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஸ்டீபன் ராப், போர்க்குற்றங்கள் குறித்து கருத்து வெளியிட்ட போதும் சரி, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இங்கு வந்திருந்த போது தெரிவித்த கருத்துகளுக்கும் சரி அரசாங்கம் கூறிய பதில் ஒரே மாதிரியானது. முன்னே தீர்மானம் எடுத்து விட்டே இங்கு வந்துள்ளார்கள் என்பதே அது.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் முன்னரே தீர்மானித்து விட்டே, களநிலைமைகளை ஆய்வு செய்ய வருவதாக, குற்றம்சாட்டுவதே அரசாங்கத்தின் வழக்கம். இது தனியே ஸ்டீபன் ராப்புக்கோ, நவநீதம்பிள்ளைக்கோ மட்டும் எதிரான குற்றச்சாட்டு அல்ல.

இலங்கையில் பயணம் மேற்கொண்ட பெரும்பாலான ஐ.நா பிரதிநிதிகளும், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகப் பிரமுகர்களும் அரசாங்கத்தின் இந்தக் குற்றச்சாட்டில் இருந்து தப்ப முடியவில்லை.

ஆனால், அரசாங்கமும் படையினர் விவகாரத்தில் அதே முன் தீர்மானத்துடன் தான் செயற்படுகிறது. படையினர் தவறுகளை செய்யவில்லை, குற்றங்களில் ஈடுபடவில்லை, மீறல்களைப் புரியவில்லை என்றே அரசாங்கம் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறது.

இதுவரை மீறல்கள் குறித்த ஆதாரங்கள் பல வெளியான போதிலும், அதனை முறைப்படி விசாரிப்பதற்குப் பதிலாக, அவற்றைப் போலி என்று முன் தீர்மானம் எடுத்து, ஓரம்கட்டி விடும் வழக்கமும் அரசாங்கத்திடம் உள்ளது.

எடுத்த எடுப்பிலேயே, ஒரு குற்றச்சாட்டை நிராகரிப்பதும், ஆதாரங்களைப் போலியென்று தூக்கியெறிவதும், இந்த அரசாங்கம் நியாயமான உள்ளக விசாரணைகளில் ஈடுபடுமா என்ற சந்தேகம் ஏற்படக் காரணமாயிற்று.

சனல்4 வெளியிட்ட போர்க்குற்ற மீறல் வீடியோக்களைப் போலியானது என்று கூறிய அரசாங்கம், அதனை எந்த வகையில் போலியானது என்று தொழில்நுட்ப ரீதியாக நிரூபிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணை நீதிமன்றம், முதற்கட்டமாக, பொதுமக்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியதான குற்றச்சாட்டு பொய் என்று ஓர் அறிக்கையை முன்வைத்தது.

அடுத்து சனல் 4 ஆவணப்படம் குறித்து விசாரணை நடத்துவதாகவும், கூறியது. ஆனால், பல மாதங்களாகியும், சனல் 4 ஆவணப்படத்தின் உண்மைத் தன்மை குறித்த இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் இறுதி அறிக்கை இன்னமும் கையளிக்கப்படவில்லை.

அந்த விசாரணை நடத்தப்பட்டதா - நடத்தப்படுகிறதா அல்லது கைவிடப்பட்டு விட்டதா என்று எதுவுமே தெரியாது. எந்தக் குற்றச்சாட்டுகளையும் நிராகரிப்பதிலேயே அரசாங்கம் இதுவரை கவனம் செலுத்தி வந்துள்ளது.

இப்போது அரசாங்கத்தின் போக்கில் புதிய மாற்றம் ஒன்றை அவதானிக்க முடிகிறது. குற்றச்சாட்டுகளை சுமத்தினால், அதுகுறித்த குறுக்கு விசாரணைகளுக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

நீதி அமைச்சர் என்ற வகையில், அவரது இந்தக் கருத்து முக்கியமானது.

போர்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் போது, அதுதொடர்பான சாட்சிகளையும் முன்வைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார். அரசதரப்பிடம் சாட்சிகளைக் கேட்கின்ற போக்கு அதிகரித்து வருவதைக் காணலாம்.

அண்மையில் ஸ்டீபன் ராப் புதுக்குடியிருப்புக்குச் சென்றிருந்த போது, சென். அந்தனிஸ் மைதானத்தை, நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படையினரின் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்ட இடம் என்று குறிப்பிட்டு டுவிட்டர் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது அமெரிக்கத் தூதரகம்.

அதை நீக்குவதற்கு இலங்கை அரசாங்கம் எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டும் அது பயனளிக்கவில்லை.

அத்தகைய சம்பவம் தொடர்பாக சாட்சியங்கள் கிடைத்துள்ளதாக கூறி, அரசாங்கத்தின். கோரிக்கைய்யை நிராகரித்து விட்டது அமெரிக்கா.

உடனடியாகவே, அந்த சாட்சிகளை வெளிப்படுத்துமாறு கோரியிருந்தார் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக். ஆனால் அதற்கு அமெரிக்கத் தூதரகம் மறுத்து விட்டது.

அமைச்சர் ஹக்கீமின் கருத்தும், கிட்டத்தட்ட சாட்சிகளை முன்னிறுத்தி விசாரிக்க கோரும் வகையில் தான் இருந்தது. ஆக, அடுத்த ஜெனிவா கூட்டத்தொடரில், தனக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுகளை முறியடிக்கும் ஓர் ஆயுதமாக அரசாங்கம், சாட்சிகளைக் கோரும் இந்த உத்தியைக் கையாளலாம் என்று தெரிகிறது.

இலங்கையில் சண்டைக்காரனை விட, சாட்சிக்காரனுக்குத் தான் பாதுகாப்பற்ற நிலை உள்ளது.

அதாவது, அரசாங்கத்துடன் மோதிய விடுதலைப் புலிகள் கூட குறிப்பிட்ட கால சிறைவாசம், புனர்வாழ்வுடன் வெளியே வர முடிந்துள்ளது. ஆனால், அவர்களுக்கு உதவியவர்களும், பல சம்பவங்களுக்கு சாட்சியாக இருந்தவர்களாலும் அவ்வாறு வெளியே வர முடியவில்லை.

மீறல்களுக்கு சாட்சியாக இருப்பவர்களால், நிம்மதியாக இருக்கவும் முடியவில்லை.

அதனால் தான், ஐ.நா நிபுணர் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை 2031ஆம் ஆண்டு வரை பகிரங்கப்படுத்தக் கூடாது என்று, அந்த நிபுணர் குழுவே ஐ.நா பொதுச்செயலருக்கு பரிந்துரைத்தது.

ஐ.நா அவ்வாறு தடுத்து விட்டதால், மீறல்கள் குறித்து சாட்சிகளிடம் விசாரிக்க முடியாமல் போய் விட்டதாக, அரசாங்கம் பல முறை கூறியதுண்டு.

ஆனால், போர்க்குற்றங்களை வெளிப்படுத்தும் பல படங்கள், வீடியோக்கள் வெளியான போதிலும், அவற்றிலுள்ள படையினர் யார் என்ற விசாரணைகளை அரசாங்கம் மேற்கொண்டதாக எந்த தகவலும் இல்லை.

அத்தகைய சம்பவங்கள் குறித்து அரசாங்கம் . விசாரிக்க முனைந்திருந்தால், தேவையான சாட்சிகள் கிடைத்திருக்கலாம்.

ஆனால், படையினரை குற்றக்கூண்டில் நிறுத்தக் கூடாது என்ற ஒரே முடிவுடன் இருந்து கொண்டு, அரசாங்கத்தினால் எந்த வகையிலும் சாட்சிகளையோ, ஆதாரங்களையோ கண்டுபிடிக்க முடியாது. குற்றங்களை மறைக்கத் தான் முடியும்.

அதேவேளை, சாட்சிகளை காரணம் காட்டி ஜெனிவாவில் போர்க்குற்ற விசாரணை அழுத்தங்களில் இருந்து தப்பிக்கும் அரசாங்கத்தின் திட்டம் எந்தளவுக்கு வெற்றிபெறும் என்று கூற முடியாது.

சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம் இலங்கையில் இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படாத நிலையில், அரசாங்கத்துக்கு அல்லது படையினருக்கு எதிரான எத்தகைய குற்றங்களுக்கும் சாட்சிகளை தேட முடியாது.

அந்தளவுக்கு சாட்சிகளுக்கு பாதுகாப்பற்ற நாடாக இலங்கை உள்ளது.

சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தி விட்டு, அவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்க விட்டு, சாட்சிகளைக் கேட்டால் மட்டுமே, சர்வதேச சமூகம் அதற்கு சாதகமான பதிலைக் கொடுக்கும்.

தன்னிடமுள்ள சாட்சிகளை வெளிப்படுத்தும் துணிச்சல் அதற்கு வரும். (நன்றி- தமிழ்மிரர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருகோணமலையில் சோழ இலங்கேஸ்வரன்

இதுவரை நாம் திருகோணமலையிற் சோழர்கள் என்னும் தொடரில் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஈழமான மும்முடிச்சோழ மண்டலத்தில் (இலங்கை) சோழ வம்சத்து இளவரசர்கள் அரசபிரதிநிதிகளாக முடிசூடி ஆட்சி செய்தார்கள் என்பதனைப் பார்த்திருந்தோம்.

**இனி . . .**

இதுவரை சோழ இலங்கேஸ்வரர்களாக இருவர் வரலாற்றாய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் முதலாம் இராஜேந்திர சோழனின் மகன். இவர் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் சதுர்வேதிமங்கலம் என்றழைக்கப்பட்ட கந்தளாய்ச் சாசனத்தால் அடையாளம் காணப்படுகிறார். இவர் தனது தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே ஈழமான மும்முடிச்சோழ மண்டலத்தில் முடிசூடி ஆட்சிப்பொறுப்பை ஏற்றவர். சங்கவர்மன் என்னும் பட்டப் பெயரினைக் கொண்டவர். இரண்டாவதாக ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுக்கொண்ட சோழ இலங்கேஸ்வரன் பற்றிய தகவல் கொழும்பு அருங்காட்சியகத்துச் சாசனம் மூலம் அறியக்கிடக்கிறது. கால அடிப்படையில் சங்கவர்மனுக்குப் பிறகு ஆட்சிப்பொறுப்புக்கு வந்த இவர் இரண்டாம் இராஜேந்திர சோழனின் புதல்வர்களில் ஒருவர். உத்தமசோழன், விக்கிரமசலாமேகன் என்ற பல பட்டப்பெயர்களுக்குச் சொந்தக்காரர்.

எனவே உத்தமசோழன், சங்கவர்மன் ஆகிய இருவரும் சோழ இலங்கேஸ்வரன் என்ற பெயருடன் ஒருவர் பின் ஒருவராக இலங்கையில் ஆட்சிபுரிந்தனர் என்பது சாசன ஆதாரங்கள் மூலம் உறுதியாகிறது.



முதலாம் சோழ இலங்கேஸ்வரன் தொடர்பான தகவல்களைத் தரும் கந்தளாய்ச் சாசனம் ஒரு வரலாற்று ஆவணம் என்றவகையில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இச்சாசனம் அரசனின் பெயர், அது எழுதப்பட்ட காலம், இராஜராஜ சதுர்வேதி மங்கலம் தொடர்பான தகவல்கள், பெருங்குறிப் பெருமக்கள் மற்றும் வரிசேகரிப்பாளன் பற்றிய விபரங்கள், கந்தளாய்க் குளத்துடன் தொடர்புடைய நீர்ப்பாசன வாய்க்கால்களைப் பற்றிய தீர்மானங்கள் என்பன பற்றிய செய்திகளைத் தருகிறது. இக்கூட்டம் அக்காலத்தில் கந்தளாயில் இருந்த சிவன் கோவில் மண்டபம் ஒன்றில் கூட்டப்பட்டதையும் அக்கூட்டத்தின் முடிவுகள் மண்டபத்துாணில் சாசனமாகப் பதுப்பிக்கப்பட்டதையும் அனுமானிக்க முடிகிறது. கற்பலகைச் சாசனமான கந்தளாய்ச் சாசனம் சேதமடைந்து இரு துண்டங்களாகக் கிடைத்ததினால் மேற்படி கூட்டத்தில் மகாசபையார் கூடி என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பது தெளிவாகவில்லை.

இச்சாசனம் முதலாம் இலங்கேஸ்வரனை 'ஸ்ரீ கோ சங்கவர்மரான உடையார் ஸ்ரீ சோழ இலங்கேஸ்வர தேவர்' என்று விழிக்கிறது. சோழ மன்னர்களை 'கோ', 'உடையார்', 'தேவர்' என்ற அடைமொழிப் பெயரால் கௌரவமாக அழைக்கும் சம்பிரதாயம் அக்காலத்தில் தமிழக சோழமண்டலங்களில் வழக்காக இருந்தது. அவ்வொழுங்கின் படியே சோழ இலங்கேஸ்வரனும் அழைக்கப்பட்டிருக்கிறான் என்பதனைச் சாசனம் உறுதிப்படுத்துகிறது.

அடுத்ததாக இக்கூட்டம் இடம்பெற்றகாலம் அவ்வரசனின் பத்தாவது ஆட்சியாண்டுக்குரியது என்பதனையும் அது ஒரு மாசிமாத செவ்வாய்க்கிழமை இரவு என்பதனையும் இச்சாசனம் குறித்துநிற்கின்றது. இது தொடர்பில் ஆராய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர்களான இந்திரபாலா, குணசிங்கம் என்போர் சாசனம் விபரிக்கின்ற நிகழ்ச்சி கி.பி 1033 இல் அல்லது கி.பி 1047 இல் நடைபெற்று இருக்கவேண்டும் என்ற கருத்தினை முன்வைக்கிள்றனர்.

இந்நிகழ்வு முதலாம் சோழ இலங்கேஸ்வரனின் பத்தாவது ஆட்சியாண்டில் நடைபெற்றது என்பதனால் சங்கவர்மன் ஈழமண்டலத்து அரசனாக முடிசூடிய காலம் கி.பி 1023 அல்லது கி.பி 1037 என்ற கருத்தினை பேராசிரியர் குணசிங்கம் முன்வைக்கிறார். எனவே முதலாம் இராஜேந்திர சோழனின் மகன் இலங்கையில் சிலகாலம் ஆட்சிபுரிந்துள்ளான் என்பது உறுதியாகிறது. முதலாம் சோழ இலங்கேஸ்வரன் தொடர்புடைய கந்தளாய், மானாங்கேணிச் சாசனங்கள் இரண்டும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஊர்களில் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

அரசன் பற்றிய தகவலைத் தொடர்ந்து இக்கூட்டத்தினைக் கூட்டிய மகாசபையாளரான பெருங்குறிப் பெருமக்கள் கந்தளாய்க் குளத்திற்கு உரித்தான வாசுதேவ வாய்க்கால், விக்கிரம சோழ வாய்க்கால், இரண்டாங் கண்ணாறு என்பன தொடர்புடைய தீர்மானம் ஒன்றினை மேற்கொண்டதைக் குறிப்பிடுகிறது. எனவே சோழ இலங்கேஸ்வரன் காலத்தில் கந்தளாயில் நீர்ப்பாசன வசதியுள்ள வயல்நிலங்களும், கந்தளாய்க் குளமும், வாய்க்கால்களும் அதனை ஆதாரமாகக் கொண்ட சீரான நீர்ப்பாசன முறையும் இருந்தன என்பதற்குச் சான்றாக இச்சாசனம் விளங்குகின்றது.

இச்சாசனத்தில் வரும் 'நம்மூர் தண்டுகின்ற முத்தங்கைக் கோயில் மானி' என்ற தொடர் கந்தளாயில் அமைந்திருந்த அம்மன் கோயிலைச் சேர்ந்த அந்தணன் ஒருவன் குடிமக்களிடம் இருந்து வரி அறவிடும் பணிக்காக நியமிக்கப்பட்டிருந்ததைக் குறிக்கிறது. எனவே கந்தளாய் எல்லைக்குள் ஈஸ்வரம் (சிவன்கோவில்) ஒன்றும் அம்மன் கோவிலொன்றும் அமைந்திருந்ததை இச்சாசனம் ஆதாரப்படுத்துகிறது.

பதினோராம் நூற்றாண்டில் அமைந்திருந்த சமய, சமூக நிறுவனங்கள் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும் இச்சாசனம் திருகோணமலையில் சோழ இலங்கேஸ்வரனின் ஆட்சிக்காலத்தினை ஆதாரப்படுத்தி நிற்கிறது. - **முற்றும்** -

**-வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்-**

# இப்படியும் சில மனிதர்கள்....?

இலங்கையின் வடமாகாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட அவர் அன்றைய யுத்த சூழல் காரணமாக இங்கிலாந்திற்கு சென்றிருந்தார். அங்கு அவர் சுமார் பத்துவருடங்களுக்கு மேலாக வாழ்ந்தும் பிரஜா உரிமைக்கான அனுமதி அங்கு வழங்கப்படாததால் தனது தாய் நாடான இலங்கைக்கு திரும்பி வந்து விட்டார். ஆனால் அவரோடு இங்கிலாந்துக்கு சென்ற பலருக்கு எப்படியோ பிரஜா உரிமை அனுமதி கிடைந்திருந்தது.

அவருக்கு தற்பொழுது 63 வயது, ஒரு சில வருடங்களுக்கு முன் அவருக்கு பிரஜா உரிமைக்கான அனுமதி கிடைத்துவிட்டதென இங்கிலாந்திலுள்ள உறவினர்கள் மூலம் அறிந்து இருந்தாலும் இலங்கையிலுள்ள தனது பிள்ளைகளை விட்டுவிட்டு மீண்டும் அங்கு செல்ல அவர் விரும்பவில்லை.

சொர்க்கமாக இருந்தாலும் சொந்த நாட்டைப் போல் வருமா'? அவர் தனது இளைய மகளின் குடும்பத்துடன் இலங்கையில் நிரந்தரமாகிவிட்டார். ஆனால் அவரின் இரண்டு ஆண் பிள்ளைகள் இங்கிலாந்தில் திருமணமாகி அங்கு நிரந்தர வாசியாகியதால் அவருக்கு பணத்தட்டுப்பாடு இருக்கவில்லை. பணம் அங்கிருந்து வந்து சேர சில தாமதங்கள் ஏற்படும் பொழுது கையிலுள்ள நகைகளை வங்கியில் ஈடு வைத்து விட்டு மகன்மார் பணம் அனுப்பியதும் அவற்றை மீட்டு விடுவார்.

மேலும் அவர் ஒரு சுகதேகியாகத்தான் இருந்து வந்தார். ஆனால் இடையிடையே சில நோய்களின் சேட்டைகளால் சற்று தளர்ந்து போனார். ஒரு நாள் அவருக்கு மூச்சு திணறவே அவரின் குடும்பத்தார்

அவரை அரசினர் பொது மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு சிகிச்சை பயனளிக்காததினால் திடீரென காலமாகிவிட்டார். இனிமேல் கேட்கவா வேண்டும்? அது திடீர் மரணம் என்பதால், திடீர் மரண விசாரணை, காவல்துறை நடவடிக்கைகளை மருத்துவமனை நிர்வாக விடயங்கள் ஆகியவற்றுக்கு வாய் மறுமொழி அளித்து, எப்படியோ பல சிக்கல்கள் மத்தியில் பிரேதத்தை குடும்பத்தினர் வீட்டுக்கு கொண்டு சென்று இறுதி கிரியைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குறித்த நபர் வெள்ளிக்கிழமை மாலை இருந்தபடியால் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிபோல் அடக்கம் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. காரணம் வெளிநாட்டில் வசிக்கும் அவரின் பிள்ளைகள் அங்கிருந்து வர வேண்டுமென்பதற்காக.

இறந்தவரின் குடும்பத்தினர் கடும் சைவப் போக்கை கடைப்பிடிப்பவர்கள் என்பதால் இறுதிக கிரியைகளுக்கான நடவடிக்கைகள் மிக நேர்த்தியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும் இறந்தவருக்குரிய முக்கிய தங்க நகையொன்று கிரியைக்கு தேவைப்பட்டது, ஆனால் அது வங்கியில் இருந்தது. அன்று சனிக்கிழமை என்பதால் .அதை வங்கியில் இருந்து மீட்டுக்கொள்வதற்கு போதிய கால அவகாசம் இருக்கவில்லை ஏனெனில் அன்று பகல் 1.00 மணியுடன் வங்கியின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

மேலும் அங்கே இன்னுமொரு சிக்கல் தோன்றியது அதாவது நகையின் உரிமையாளர் தற்பொழுது உயிருடன் இல்லாததால் வங்கி தனது வழமையான கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை குடும்பத்தாருக்கு விளக்கியது. குடும்பத்தாரும் தங்களுக்குள்ள தற்போதைய பிரச்சினையை விளக்கினர். ஆனால் வங்கி தனது வழமையான நடைமுறைகளை மாற்றிக் கொள்ள விரும்பாததால் அவர்கள், வங்கியுடன் தொடர்புடைய பிரமுகர்களை சந்திக்க தொடங்கினர். குடும்பத்தார் வங்கியின் சட்டதரணியை முதன் முதலில் சந்திக்கச் சென்றனர்.

அவர் முன்னாள் நகராட்சி மன்ற மாகாணசபை, ஆகியவற்றின் கௌரவ உறுப்பினராக செயல்பட்டவர். பிரதேசத்தில் ஒரு முக்கிய அரசியல்வாதியும் கூட, குடும்பத்தார் அவரிடம் பிரச்சினையை முன்வைத்தாலும் அவர் 'கழுவின மீன்களில் நழுவின மீன்' போன்று செயல்பட தவறவில்லை.

எடுத்த எடுப்பிலே 'செய்ய முடியாது' என கையை விரித்துவிட்டார். குறித்த வங்கிக்குரிய சட்டத்தரணியாக இருந்தும் அவ்விடயத்தில் அவர் எவ்வித முயற்சியும் எடுக்காதமை அக் குடும்பத்தாருக்கு கடும் வேதனையை அளித்தது.

அச்சட்டத்தரணி தேர்தலில் போட்டியிட்ட காலத்தில் அக்குடும்பத்தினர் இரவு பகல் பாராது அவரின் வெற்றிக்கு உதவி புரிந்தவர்கள். அது மாத்திரமல்ல அவர் அந்த குடும்பத்தாரின் குடும்ப சட்டத்தரணியும் கூட. அப்படியொரு நெருக்கம் இருந்தும் அவரின் செயற்பாடு அங்குள்ள அனைவரினதும் அதிருப்திக்கு காரணமாக இருந்தது.

அவர் அவ்விதம் நடந்து கொண்டமைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருந்தன. அவர் இனிமேல் தேர்தல்களில் குதிப்பதில்லை என்ற தீர்க்கமான அவரின் ,முடிவும், அது ஒரு நீதிமன்ற செயற்பாடு அல்லாத விடயம் என்பதால் அவர்களிடம் இருந்து பணம் கரக்க முடியாத நிலையுமாகும்.

குறிப்பாக சட்டத்தரணிகளிடம் மனித நேயத்தை எதிர்பார்க்க முடியாது என்பதற்கு அன்று அச்சட்டத்தரணியின் நடவடிக்கை நல்லதொரு உதாரணமாக விளங்கியதை எவராலும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

என்னவாக இருந்தாலும் அவ்விடயம் தொடர்பாக அந்த சட்டத்தரணியின் வீட்டுப்படலைக்கு போக முடிந்ததே பெரும் காரியம், ஏனென்றால் சில சட்டத்தரணிகள் இப்படியொரு விளம்பரப் பலகையை அவர்களின் 'அலுவலகங்களில் தொங்கவிட்டு இருக்கிறார்கள்.

'சட்டம் சம்பந்தமாக அறிவுரை பெறுவதாகில் உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.' இன்னுமொரு சட்டத்தரணி அடிக்கடி இப்படிக் கூறுவார் 'மயில் இல்லாவிட்டால் இந்த குயில் பாடாது' என்று அதாவது 'மயில்' என்று அவர் குறிப்பிடுவது ஆயிரம் ரூபா நோட்டை 'குயில்' என்று குறிப்பிடுவது அவரை.

எனவே இங்கே மனிதபிமானத்திற்கு அறவே இடமே இல்லை. ஒருவருக்கு பிரச்சினை வரும்பொழுது எவரும் அன்னார்ந்து, கண்டும் காணாமல நடந்து கொள்வதையே வழக்கமாக கொண்டுள்ளனர்.

இருப்பினும் தங்களின் தீவிர முயற்சியை அக்குடும்பத்தினர் கைவிடவில்லை. விக்கிரமாதித்தன் போன்று துரிதமாக செயல்பட தொடங்கினர். அவர்கள் எழுத்த முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியை தழுவினாலும் அவர்கள் தமக்கு முன்னால் வரும் கடுமையான சவால்களிலிருந்து அவ்விடயத்தில் ஒரு சாதனையை படைக்க வேண்டுமென்று திடசங்கற்பம் பூண்டு அப்பிரதேசத்தில் வாராந்தம் வெளிவரும் பத்திரிகை நிறுவனத்தின் பிரதம ஆசிரியரை சந்திக்க சென்றனர்.

அவர் பிரபல ஊடகவியல்லாளர் என்பதால் அங்கு பலரை அறிந்து வைத்துள்ளார். தன்னை உதவிக்காக தேடி வருபவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை புரிந்து வருவார். அந்த வகையில் அவர்களின் பிரச்சினைக்கு உதவ அவர் முன்வந்து தொலைபேசி மூலம் பல்ரை அணுகினாலும் எங்கும் பிரச்சினையை தீர்க்க கூடிய சாதகமான பதில் கிடைக்காததினால் அவர் நேரடியாக களத்தில் இறங்கினார்.

(தொடரும்)

**-பாலையூற்றான்-**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கருணைக் கடல்

பரந்த தேசம் அது எங்கு பார்த்தாலும் வெண்மணற் பரப்பு, அதனருகே நீலக்கம்பளம் விரித்ததைப் போல நீலக்கடல் அடுக்கடுக்கான அலைகள் கரையின் மீது வந்து உரசிச் செல்கின்றது. அலைகளிலும் உறவுகள் உள்ளனவோ! பெண் அலையை ஆண் அலை துரத்தி வருவது போல் கரையின் மீது இரண்டு அலைகள் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வருகின்றது. பெண் அலை வெட்கத்தால் தலை குனிந்து செல்ல ஆண் அலை தோல்வியை ஏற்றுக்கொள்ள மறுத்து மீண்டும் முயற்சி செய்கின்றது. அதிலும் தோல்வியே கிடைக்கின்றது. எப்பொழுதாவது பிடித்து விடலாம் என்ற நம்பிக்கையில் முயற்சி செய்து கொண்டிருக்கிறது ஆண் அலை. அக்கடற்கரையிலே பலர் கடலை ரசிக்கின்றார்களோ தெரியவில்லை. நடந்த வண்ணமும் இருந்த வண்ணமும் எதை தான் கதைக்கிறார்களோ புரியவில்லை. அந்த கடல் அலையைப் போலத் தான் அவளது நெஞ்சமும் ஓயாது அடித்துக் கொண்டிருக்கின்றது. மெல்ல எழுந்த தென்றல் காற்று அவள் மேல் பட்டு மேனி சிலிர்த்ததைக் கூட உணராதவளாய் அமர்ந்து இருக்கின்றாள்.

என்ன நினைவுகளை நினைத்தாலோ தெரியவில்லை உள்ளத்தில் இருந்து பொங்கி எழுந்த நினைவின் நிகழ்வுகளின் பிரதி விம்பத்தைக் காட்டுவது போல கயல் மீன் போன்ற கண்களிலிருந்து முத்து துளிகள் சிதறுவது போல் கண்ணீர் துளிகள் சிதறிக் கொண்டிருந்தது. கடல் அலைகளின் வேகத்தை போலவே அவளது கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தன. இவற்றை எல்லாம் எங்கிருந்தோ பார்த்துக் கொண்டிருந்த சுதன். 'யார் இவளோ. . . . யார் இவளோ . . . . எங்கேயோ பார்த்த மயக்கம் . . . . ' என்று மனதுக்குள் பாடிக் கொண்டு வெண்மணற் பரப்பில் அவனது பாதங்களை அழுத்தி மெதுவாக நடந்து வந்தான்.

அவள் அமர்ந்திருக்கும் இடத்திற்கு அருகே உள்ள கற்பாறையின் மீது அமர்ந்திருந்து அவள் பார்க்காத நேரம் அவளை உற்று நோக்கினான். அவள் அழுத வண்ணமே அமர்ந்திருந்தாள். ஓரளவாய் கிழிந்திருந்த அவளது சட்டையிலே பல்லாயிரக் கணக்கான தையல்கள், வண்ணங்கள் எல்லாம் மாறி வடிவங்கள் இழக்கப்பட்ட நைந்து போன பழைய சட்டையது, காதிலும் எதுவுமில்ல, கழுத்திலும் எதுவுமில்லை, கால்களிலும் எதுவுமில்லை, இவள் யாரோ பெற்றோரை இழந்தவளோ, பாதுகாவலர் அற்றவளோ என்று தனக்குள்ளே கேட்டுக் கொண்டான் சுதன். மனம் பதில் சொல்ல மறுக்கின்றது. ஒரு மணி நேரம் முடிந்து பல மணி நேரம் ஆகிவிட்டது. அவள் அந்த இடத்தை விட்டு அசையவே இல்லை. இப்போது தான் கண்ணீர் சற்று குறைந்துள்ளது. சுதன் கையிலே உள்ள கடிகாரத்தை பார்க்கின்றான் நேரம் ஏழு மணியாகி விட்டது.

சூரியனும் மறைந்து விட்டான் நிலவு வருவதற்கான சந்தர்ப்பம் அது. எங்கும் காரிருளின் கைக்குள் உலகமே சிக்குண்டு போகின்றது. அங்கு அவ்வளவு நேரம் அமர்ந்திருந்த அவளை காணவில்லை. சுற்றும் முற்றும் தேடிப் பார்த்தான். எங்குமே காணவில்லை. அவளது காலடித் தடங்கள் மட்டும் புலப்படுகின்றது. அதை நோக்கி செல்ல அவன் விரும்பவில்லை நாளை அவள் இங்கு வந்தால் அவளிடம் எப்படியாவது கதைத்து விட வேண்டுமென்று அவள் உள்ளம் சொன்னது. சுதன் தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு சென்றான். தனது வேலைகளை எல்லாம் முடித்து விட்டு நித்திரைக்கு சென்றான். ஆனால் அவனுக்கு நித்திரை வரவில்லை. அவள் நினைவாகவே இருந்தது. பாவம் அவள் என்று எண்ணியபடி வெளியே வந்து நிலவை பார்க்கின்றான். நிலவு தென்படவில்லை, நிலவை மறைப்பது அவள் முகமே, சுதனின் மனம் புலம்புகின்றது. எங்கிருந்து வந்தாள். எப்படி சென்றாள் எதுவும் புரியவில்லை. நினைவில் அமர்ந்தவாறு உறங்கிவிட்டான்.

காலை புலருகின்றது. பறவையினங்கள் எல்லாம் பறந்து ஆரவாரம் செய்கின்றது. சுதன் தனது வேலைகளை முடித்துக் கொண்டு அலுவலகத்திற்கு செல்ல தயாரானான். தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். நேற்றைய நினைவுகள் கடற்கரை பக்கமாய் மோட்டார் சைக்கிள் செல்கின்றது. அங்கு அவளைத் தவிர அனைவருமே தென்படுகின்றனர். அலுவலகத்திற்கு செல்வதற்காக மோட்டார் சைக்கிள் மின்னல் வேகத்தில் பறக்கின்றது. சுதன் அலுவலகம் சென்று வழமை போல் தனது கடமையில் ஈடுபடுகின்றான். நேரம் வேகமாய் சுழன்றது. நேரம் ஐந்து மணியாகிவிட்டது. அனைவரும் அலுவலகத்தை விட்டு புறப்பட்டனர். சுதன் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது கடற்கரை காற்று அவன் மேல் படுகின்றது. திரும்பி பார்க்கின்றான். கடற்கரையில் கூட்டம் கூட்டமாக மக்கள் இருக்கின்றனர். வீட்டுக்கு சென்று மீண்டும் வரலாம் என எண்ணிக் கொண்டு செல்கின்றான் சுதன் வீட்டில் தேநீர் ஒன்றை அருந்திவிட்டு கடற்கரைக்கு புறப்பட்டான். காற்று வாங்க அல்ல. கன்னி அவளை தேடிக் கொண்டு . . . . .



கடற்கரையின் மீது நடந்து சென்றான். கடல் அலைகளின் சத்தம் காதை பிளக்கின்றது. அங்கு அவளைத் தேடினான். இன்று அவள் வரவில்லையோ என்று எண்ணியவன் அங்குள்ள தாழை மரத்தின் கீழ் அமர்ந்தான். சுதன் அமர்ந்திருக்கும் தாழை மரத்தின் பின்புறத்தில் அவள் அமர்ந்திருப்பதை அவன் அறியவில்லை. சிறிது நேரம் சென்றது. சுதனின் மேல் ஒரு சோல் பின்புறம் இருந்து பறந்து வந்து விழுந்தது. அதை எடுத்த அவன் யாருடையது என்று எட்டிப்பார்த்தான். அங்கு அவள் தாழை மரத்தில் சாய்ந்தபடி கண்களை மூடிக் கொண்டு சாய்ந்திருந்தாள். சுதனுக்கு ஒரே சந்தோஷம். ஆனால் அவள் சட்டை அணிந்திருந்தாள். அப்ப இந்த சோல் யாருடையது என்று யோசித்தான். அங்கிள் இந்த சோல் என்னுடையது என்று ஒரு குரல் திரும்பி பார்த்தான், ஒரு சிறுமி நின்று கொண்டிருந்தாள். அதை அவளிடம் கொடுத்தான் சுதன்.

சிறுமியின் குரலின் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டாள் அவள். இப்போது சுதனின் மனம் படபடவென அடித்துக் கொண்டிருந்தது. அவளிடம் கதைப்போமா, வேண்டாமா என்று மனம் யோசித்தது. ஒருவாறு மனதை தேற்றிக் கொண்டு கதைக்க ஆரம்பித்தான். நான் சொல்லுறதை தயவு செய்து கேளுங்களேன். நீங்க யார் என்று எனக்கு தெரியாது நான் உங்களை நேற்றும் இந்த இடத்தில் கண்டேன் நீங்க அழுது கொண்டிருந்திங்க. உங்களுக்கு என்ன பிரச்சனை என்று தெரியவில்லை. நீங்க எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லுங்க என்ர பெயர் சுதன், நீங்க ஏன்னை நம்பலாம் என்று மென்மையான குரலில் கூறினான். அப்போது தான் அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள். கண்கள் இரண்டும் சிவந்து போய் இருந்தது. இந்த கடற்கரையில் யாருமே என்னை கண்டுகொள்ளவில்லை. நீங்கள் மட்டும் கருணை உள்ளம் கொண்டு என்னைத் தேடி வந்திருக்கின்றீர்கள். ரொம்ப நன்றி நீங்க கேட்டதால் சொல்லுகின்றேன்.

எனது பெயர் வீணா, நான் உயர்தரம் படித்தேன். எனக்கு கல்வி கற்க மிகவும் பிடிக்கும். உயர்தரக் கல்வியை தொடர்ந்து கற்க எனது குடும்ப சூழல் இடம் கொடுக்கவில்லை. நான் சிறிய வயதில் தாயை இழந்தவள். அப்பா மட்டும் தான் இருந்தார். அவர் நிறையவே குடிப்பார். நான் எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. அதனால் அவருக்கு புற்றுநோய் வந்தது. என்னால் அவரை தனியே விட்டு ஸ்கூல் போக முடியவில்லை. நான் வீட்டில் இருந்து அப்பாவை கவனித்துக் கொண்டேன். பல கஷ்டங்களை அனுபவித்தேன். எனக்கு துணையாக இருந்த 'அப்பா திங்கட்கிழமை இறந்து போனார். அவருடைய ஈமக்கிரியை செய்ய என்னிடம் பணம் இல்லை. அதனால் நான் இருந்த வீட்டை விற்று அந்த பணத்தில் ஈமக்கிரியை செய்து முடித்தேன். இப்போது எனக்கு யாருமற்ற நிலையில் அநாதையாக இருக்கின்றேன். எனக்கு வாழ்வதற்கும் வழியில்லை. சாவதற்கும் விதியில்லை, என்ன செய்வது என்று புரியவில்லை. நான் நேற்றும் சாகலாம் என்று தான் கடற்கரைக்கு வந்தேன். ஆனால் என்னால் முடியல்ல இன்றும் அதற்கு நான் வந்தேன். இந்த இரண்டு நாளாக எதுவும் சாப்பிடவும் இல்லை . . . என்று கூறிக் கொண்டிருந்தவள், திடீரென அப்படியே மயங்கி விழுந்தாள். சுதனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. உடனே வைத்திய சாலைக்கு தூக்கிச் சென்றான். அங்கு அவளுக்கு பல வகையான சிகிச்சை அளிக்கப்பட்டது. டொக்டர் சுதனை அழைத்து வீணாவுக்கு உடல் நிலை மோசமாக இருக்கின்றது. இரண்டு நாள் வைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெறவேண்டும் என்றார். சுதன் இரண்டு நாட்களும் வீணாவுடன் வைத்தியசாலையில் இருந்தான். மூன்றாவது நாள் வீணாவை தனது வீட்டிற்கு அழைத்து வந்தான். வீணா எதுவும் பேசாமல் அவன் பின் தொடர்ந்தாள். சுதன் வீணாவைப் பார்த்து வீணா இனி நீ என்னோட பாதுகாப்பில் இருக்கலாம். நீ என்ன படிக்க நினைத்தாயோ அதை படிக்கலாம். உனக்கு என்னோட இருக்க சம்மதமா? என்று கேட்க. வீணாவின் முகத்தில் புன்னகை பூத்தது.

இவ்வாறாக வீணா சுதனின் வீட்டில் இருந்து நன்றாக படித்தாள். தன்னுடைய டிப்ளோமா கல்விக்காக வெளிநாடு சென்றாள் காலங்கள் பல கடந்தன. அன்றொரு நாள் வீணா படிப்பை முடித்துக் கொண்டு தனது ஊருக்கு வந்தாள். அங்கு சுதன் அவளை வரவேற்க வரவில்லை. மனதில் சஞ்சலம் எழவே சுதனை காண்பதற்காக ஓடோடி வீட்டிற்குள் புகுந்தாள். அங்கு வீணா கண்ட காட்சி அவளை பிரமிப்பில் ஆழத்தியது. சுதனின் கால்கள் இரண்டும் இழக்கப்பட்ட நிலையில் கதிரையில் அமர்ந்திருந்தான். வீணாவின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. வீணா ஓடிச்சென்று சுதனின் கால்களிலே வீழ்ந்தாள். எனக்காக எல்லாவற்றையும் அர்ப்பணித்த இவருக்கா இந்த நிலை என்று புலம்பினாள். எப்படி நடந்தது ஏன் என்னிடம் இதைப் பற்றி சொல்லவில்லை எனக் கேட்டாள்.

வீணா எனக்கு ஒன்றுமில்லை, அலுவலகத்திற்கு செல்லும் போது ஒரு சிறு விபத்து, அதனால் தான் இப்படி நடந்து விட்டது. இதை உன்னிடம் சொன்னால் நீ உன் படிப்பை சரியாக தொடரமாட்டாய், நான் இவ்வளவு கஷ்டப்பட்டது உன் படிப்புக்காக அது என்னால் சிதையக்கூடாது என்று நினைத்தேன். உன்னிடம் மறைத்ததற்கு என்னை மன்னித்து விடு என்றான் சுதன். வீணாவுக்கு சுதன் மேல் இருந்த மரியாதை இன்னும் பல மடங்காக அதிகரித்தது.

வீணா சுதனுக்கு வேண்டிய கடமைகளைச் செய்தாள். சுதன் தனக்காக செய்த உதவிகளை எண்ணி பார்த்துக் கொண்டாள். சுதனின் மனித நேய பண்புக்கு கிடைத்த அற்புத தீபவிளக்கு வீணா. சுதனின் கருணை உள்ளமும் வீணாவின் அன்பும் இருவரின் உழைப்பும் சேர்ந்து உருவாக்கப்பட்டது 'அன்பு இல்லம்' அங்கு ஏழைகளுக்கும், ஆதரவற்றோருக்கும், வீணாவைப் போன்ற பலருக்கும், கல்வி எட்டாக் கனியாக இருக்கும் மாணவர்களுக்கும் அதை பெற்றுக் கொள்ளும் அடித்தளமாக உலக புகழ் பெற்று விளங்கியது. கருணைக் கடலில் பலர் கரை சேர்ந்து கொண்டிருக்கின்றனர்.

முற்றும்

**மேனுகா வேலாயுதம் வரோதய நகர்**
**திருகோணமலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## அசைவின் அர்த்தமென்ன?

நான்
தனித்திருக்கும் இரவுகளில்
இமைகளிடையே - நீ

வழிந்தோடும் விழி
நீர் - காதுக் குழி
நிரப்பித்
தலையணை நனைக்கும்

நீயோ
நகராதிருப்பாய்
இமைகளிடையே

அக்
கடைசி நிமிடத்தில்
உன்முகமும்
விழியும் உதடும்
இரு கன்னத்தசைகளும்
பரந்த நெற்றியில் வீழ்ந்த
இரண்டு சுருக்கங்களும்

எண்ணையின்றி வாரப்படா
மயிரும் - கைகளையகற்றிப்
பிசைந்த விரல்களும்

நிலையாய்
நிற்கமுடியா தங்கிங்காய்
நடந்த அவசரமும்

வரண்ட வாயிலிருந்து
வீழ்ந்த ஓரிரு
தொடர்பிலா வார்த்தைகளும்

எதுவுமே
அப்போதெனக்குப்
புரியவில்லை.. .. ..

மூன்றுநாட்களுக்கு முன்
மதியம் மட்டும்
ஒருபுறச் சிரட்டையிற்
கிடைத்த
கஞ்சியினை - நக்கிப்பின்
ஏதுமின்றிக்கிடந்த
என் அறிவை

இன்று - பசி
வென்ற பொழுதில்
நீ வந்தாய்

வரண்ட அவ்வார்த்தைகளை
யுதிர்த்துப் பின்
விழிவழியே ஏதோ கூறிப்
போனாய்
நான்
ஏதையுமே புரியவில்லையே
என் அன்பே

இறுதியாய்
ஒருமுறையேனும் தழுவத்துடித்த
என் ஆர்வத்தை

வெறிகொண்டு நீ
தவிர்த்தபோதும் -

இப்போதே கடல்தாண்டி
அப்புறம் போய்ச்சேர்
என்ற பின்னும்

பசிவென்ற அறிவாற்
புரிதலின்றி நான் - உனைப்
பிரிந்தேன்

இப்போ
ஆண்டுகளிரண்டு கடந்தபின்னும்
நான்
புரிந்துகொள்ளத் துடிக்கும்
உன் அசைவுகளின்
அர்த்தம் தானென்ன?

உங்களுக்காவது தெரியுமா?

அவர்களின்
இறுதியசைவுகளின்
அர்த்தமென்னவென்று?

மாயன்

## நீண்ட பயணம்

- திருமலை சுந்தா -



மனம் வருந்த
காரணமென்ன?
இன்னும் மனதை குடைகின்றது

நானும் அதன்
வேர் மூடியினைத் தேடி
மண்ணுள் நீண்ட
தூரம் பயணப்படுகின்றேன்

பரமனின் முடி தேடிய
பிரம்மா பொய் உரைத்தார்
என்னால் பொய்
உரைக்க முடியவில்லை

நேர்மை ... பொறுமை....

என்னால் கால் பதிக்க
முடியவில்லை
தொடை தசைகள்
உருண்டு திரண்டு
என்னை வதைக்கின்றது
நீண்ட பயணத்தை
நிறுத்தலாமென நினைக்கின்றேன்.

என்றோ ஒரு நாள்
மற்றவர்கள் மாதிரியல்ல
மனவருத்த காரணத்தை
கண்டு பிடித்தே தீருவேன்.

நடக்கின்றேன். . . .

## - கணக்கு -

ஒன்றும் ஒன்றும்
இரண்டு என்று
கணக்கு சொல்லித்
தந்தாய் - நீ

வா

ஒன்றும் ஒன்றும்
ஒன்று என்று
காதல் சொல்லித்
தருகிறேன் - நான

*சஞ்சுதன்*

## வெடிப்பு

ஒளிப்படைவெடிப்பாம், எங்கும்
ஒருகோடிக் கதிராம் - கோளாம்!
வெளியெல்லாம் குடும்பமாகி
விரிவடைந்தனவாம், எங்கள்
வளிப் புவியுடன் மற்றேழும்
வருகுமாம் கதிரைச் சுற்றி!
களிக்கின்றோம் யாமும் வந்தே,
கணக்கிலும் 'அரை' போயிற்றாம்!

வெடிப்பில்லா திருந்தால் வாழ்க்கை
விரிவடைந்திருக்கா! மார்பின்
துடிப்பிருந்திருக்கா! மாந்தன்
தோன்றிடான்! கலைகள் தம்மின்
நடிப்பிரா! உயிர்கள் எங்கும்
நடமாடா! மக்களுக்கும்
படிப்பிரா! 'வெடிப்பு'வாழப்
பல்லாண்டு கூறுவோமே!

*"தாமரைத்தீவான்"*
*(ஈச்சந்தீவு- கிண்ணியா)*

## என்னிடம் சொர்க்கத்தின் துகில்கள் இருக்குமாயின்

என்னிடம்
சித்திரப் பின்னல்கள் இட்டு நெய்யப்படும்
தங்கமும் வெள்ளியும் ஒளிகால
நீலமும் மந்தமும் இருண்டதுமான
இரவையும் பகலையும் பாதி ஒளியையும் இட்டு
உருவாக்கப்பட்ட சொர்க்கத்தின் துகில்கள்
இருக்குமாயின்
அவற்றை நின் காலடியின் கீழ் பரப்புவேன்
ஆனால் நான்.
ஏழையாய் இருப்பதால்
என்னிடம் இருப்பதெல்லாம் கனவுகளே
எனது கனவுகளை நின்காலடியின் கீழ்
பரப்பியுள்ளேன்:
மெதுவாக மிதியுங்கள்
ஏனெனில்
என் கனவுகள் மீது மிதிக்கிறீர்கள்

*- டபிள்யூ.பி.யேற்ஸ் -*
*( நூல் - மறுபாதி)*

## சொல்லவோ?

அறிந்திருந்தும் செய்கிறார்,
அறியாமலும் செய்கிறார்!
தெரிந்திருந்தும் செய்கிறார்,
தெரியாமலும் செய்கிறார்!
புரிந்துகொண்டும் செய்கிறார்,
புரியாமலும் செய்கிறார்!
திருந்துவார்களோ இவர்,
திருந்துவதற்கு முடியுமோ?

படிக்கஅதிகம் விரும்பிடார்,
பார்க்கக் காட்சிவிரும்புவார்!
நடிக்கமட்டும் தெரிந்துள்ளார்,
நாடகத்தின் பார்வையோ?
முடிக்கமுன்னர் மூடுவார்,
முடித்தபின்னர் கிண்டுவார்!
அடிக்க அடிக்க குனிபவர்,
அவதிப்படுதல் சொல்லவோ?

***'தாமரைத்தீவான்'***
***(ஈச்சந்தீவு- கிண்ணியா)***

# அரங்க விளையாட்டுக்களும் நாடக செயற்பாட்டில் அதன் பங்களிப்பும், முக்கியத்துவமும். கடந்த வார தொடர்ச்சி

இதேபோன்று பல்வேறு அரங்க விளையாட்டுக்கள் நாடக செயற்பாட்டில் முக்கியம் பெறுவதைக் காணலாம்.

"கண்ணாடி விளையாட்டு" எனும் விளையாட்டை நோக்கும் போது, ஒரு முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன்னால் ஒருவர் நின்று செய்கின்ற அசைவுகள் எவ்வாறு கண்ணாடி விம்பமாக விழுகின்றதோ, அதேபோல் எதிர் எதிராக இருவர் நின்று ஒருவர் கண்ணாடியின் முன் நிற்பவராகவும் மற்றவர் கண்ணாடியில் தெரியும் விம்பமாகவும் இருக்க வேண்டும். இதில் எதிர்எதிர் நிற்பவர்கள் மாறிமாறி கண்ணாடியாகவும் செயற்பட வழிவகுக்க வேண்டும். இந்த அரங்கு விளையாட்டின் மூலமாக ஒருவர் இன்னொருவரை எவ்வளவு நுணுக்கமாக அவதானிக்க வேண்டும் என்பதை இவ்விளையாட்டு புலப்படுத்துகின்றது.

அதாவது நாடக நடிகர்கள் பல்வேறுபட்ட பாத்திரங்களாக மேடையில் நடிக்கின்றவர்கள். அவர்கள் நடிக்கின்ற பாத்திரங்கள் எல்லாம் நாம் நமது வாழ்க்கையில் அன்றாடம் காணும் பாத்திரங்கள். ஆகவே எமது சூழலில் காணப்படும் விடயங்களை நாடகக்காரர்கள் மிகவும் நுணுக்கமாக அவதானிக்க வேண்டும். பிச்சைக்காரன் ஒருவனின் உடற்செயற்பாடும் நொண்டி ஒருவனின் உடற்செயற்பாடும் வேறுவேறானவை. எனவே சூழலில் காணப்படும் பாத்திரங்களை அவதானிப்பதன் மூலமே எம்மால் அப்பாத்திரத்தை சிறப்பாக வெளிப்படுத்த முடியும்.

அடுத்ததாக "குருட்டு ஆட்டோ" எனும் அரங்க விளையாட்டை நோக்கும் போது மாணவர்கள் எல்லோரும் இருவர் இருவர் கொண்ட சோடிகளாக பிரிக்கப்படல் வேண்டும்.



இச்சோடிகள் ஒருவர் முதுகை ஒருவர் பார்த்தபடி விரும்பியபடி பரவலாக நிற்றல் வேண்டும். இங்கு பின்னால் நிற்பவர் சாரதியாகவும் முன்னால் நிற்பவர் வாகனமாகவும் கருதப்படுவார். வாகனமாக நிற்பவர் தனது கண்களை மூடி செவிப்புலனை விழிப்பாக வைத்திருக்க வேண்டும். பின்னால் நிற்பவர் தனது கையை நீட்டி வலது சுட்டு விரலால் முன்னால் வாகனமாக நிற்பவரின் நடுமுதுகில் தொட்டால்வாகனம் மெதுவாக நகரத்தொடங்கும். இடது முதுகில் தொட்டால் இடப்புறம் திரும்புதல், வலது பக்கம் தொட்டால் வலப்பக்கம் திரும்புதல், கழுத்தில் தொட்டால் பின்புறமாக நகருதல், தலையில் தொட்டால் சடுதியாக நிற்றல். மேற்படி தொடுகைகளுக்குகேற்ப செயற்படல் வேண்டும். இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டியது சாரதியாக இருப்பவர் வாகனமாக கண்களை மூடியபடி இருப்பவரை மோதவிடாமல் அவரை செலுத்துவதுதான்.

இந்த விளையாட்டை நோக்கும் போது கண்ணை மூடிய நபர் தன்னை இயக்குகின்ற நபரில் நம்பிக்கை வைத்திருப்பதைக காணமுடிகின்றது. அதாவது தன்னை இயக்குபவர் தனக்கு ஆபத்து நேராமல் செயற்படுவார் என்ற எண்ணம் கண்ணை மூடியவரிடத்தே காணப்படுகின்றது.

அடுத்தவாரம் அரங்கு அசையும்...

**திருமதி. உமா சிறிசங்கர்**
விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## நடிகை நஸ்ரியாவுக்கு விரைவில் திருமணம்

நடிகை நஸ்ரியாவுக்கும், மலையாள நடிகர் பஹத் பாசிலுக்கும் விரைவில் திருமணம் நடைபெறவுள்ளது. பர்கத் பாசில் மலையாளத்தில் முன்னணி நடிகராக உள்ளார்.



இவர் தமிழில் 'காதலுக்கு மரியாதை', 'பூவிழி வாசலிலே', ' பூவே பூச்சூடவா', 'வருஷம் 16' உள்ளிட்ட படங்களை இயக்கிய பாசிலின் மகன் ஆவார்.

பஹத் பாசிலும், நஸ்ரியாவும் 'எல்பார் லவ்' என்ற மலையாள படத்தில் ஜோடியாக நடிக்கின்றனர். படப்பிடிப்பில் நெருக்கம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இவர்கள் திருமணத்துக்கு பெற்றோர்கள் சம்மதம் தெரிவித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

நஸ்ரியா 'நேரம்' படம் மூலம் தமிழில் அறிமுகமானார். ராஜா ராணி, நையாண்டி படங்களில் நடித்துள்ளார். தற்போது ஜெய் ஜோடியாக 'திருமணம் எனும் நிக்கா', துல்கர் சல்மான் ஜோடியாக 'வாயை மூடி பேசவும்' போன்ற படங்களில் நடித்து வருகிறார். இந்த படங்களை முடித்துவிட்டு திருமணம் செய்து கொள்கிறார். திருமணத்துக்குப் பின் நடிப்பாரா?, அல்லது சினிமாவுக்கு முழுக்கு போடுவாரா? என்பது தெரியவில்லை.

## காதல் காட்சிகளில் என் மகன் சிறப்பாக நடிக்கிறான் - கார்த்திக் புகழாரம்

காதல் காட்சிகளில் என் மகன் சிறப்பாக நடிக்கிறான் என கார்த்திக் கூறியுள்ளார்.



ரவி தியாகராஜன் இயக்கும் 'என்னமோ ஏதோ' படத்தில் கௌதம் கார்த்திக் கதாநாயகனாக நடிக்க நிகிஷா படேல், ராகுல் ப்ரீத்தி சிங் ஆகிய இருவரும் நாயகிகளாக நடிக்கின்றனர்.

இந்த படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா சென்னை வடபழனியில் உள்ள கமலா திரையரங்கில் நடந்தது. முன்னதாக படத்தின் தயாரிப்பாளர் ரவிகுமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.

அதனைத் தொடர்ந்து விழாவில் நடிகர் கார்த்திக் பேசுகையில், இது ஒரு தெலுங்கு படத்தை தழுவிய கதை. படம் பார்த்ததுமே அதில் கௌதமை நடிக்க வைக்க முடிவு செய்தேன். தினமும் படப்பிடிப்புக்கு போய் வந்ததும், அன்று படமாக்கிய காட்சிகள் பற்றி கௌதம் என்னிடம் சொல்வார். மேலும் இப்போது உள்ள கதாநாயகிகளைப் பார்க்கும் போது எனக்கு வெட்கமாக இருக்கிறது. என்னைவிட அவர்கள் உயரமாக இருக்கிறார்கள். காதல் காட்சிகளில் என்னை விட என் மகன் சிறப்பாக நடிக்கிறார்.

தற்போதைய தமிழ் சினிமா அதிசயிக்கிற வகையில் பல சாதனைகளை செய்து வருகிறது. சினிமாவில் திறமையான இளைஞர்கள் உருவாகியிருக்கிறார்கள். சந்தோஷமாக இருக்கிறது என்று கூறியுள்ளார்.

## இலங்கை மலையக சமூகத்தின் கண்ணீர் கதைதான் "இங்கிருந்து"

டாக்டர்.சுமதி சிவமோகனின் 'இங்கிருந்து' திரைப்படம் ரிலீசுக்கு தயாராகியுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறைத் தலைவர் கலாநிதி சுமதி சிவமோகன் எழுதி தயாரித்து இயக்கியிருக்கும் இலங்கை தமிழ் திரைப்படம் 'இங்கிருந்து' மலையக சமூகத்தின் கண்ணீரும், வியர்வையும், குருதியும் கலந்த வாழ்க்கை போராட்டத்தை ஈரம் காயாமல் அதே பச்சையுடன் காட்சிப்படுத்தியுள்ள இப்படத்தை வருகிற மார்கழி 20 ஆம் திகதி வெளியிட திட்டமிட்டுள்ளது படக்குழு. இப்படம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் டெல்லியில் நடைபெறவுள்ள 10வது ஆசியப் பெண்கள் திரைப்பட விழாவில் திரையிடுவதற்கு தேர்வாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## படவாய்ப்புக்காக ஒல்லிக்குச்சியாக மாறும் நமிதா!

கல்யாணம், காதுகுத்து, ஜவுளிக்கடை, நகைக்கடை திறப்பு, டி.வி நிகழ்ச்சிகளில் நடுவர் என நமீதா பிஸியாக இருந்தாலும் கையில் படங்கள் இல்லை. மங்கை அரிராஜன் வருடக் கணக்கில் இயக்கி வரும் இளமை ஊஞ்சல் என்ற படம் மட்டுமே நமீதா கையில் இருக்கிறது. அதிலும் 5 ஹீரோயின்களில் ஒருவர்தான்.

ஒரு நாளைக்கு 12 மணிநேரம் ஜிம்முக்கு போகிறார். முழுநேர டயட்டில் இருக்கிறார். மருத்துவர்களை கலந்தாலோசித்து சில சிகிச்சைகளையும் எடுத்துக் கொண்டார். அப்படி இருந்தும் வெயிட் குறையவில்லை. சரி இனி உடம்புக்கு ஏற்ற கேரக்டரில் நடிப்போம் என்று முடிவு செய்து சமீபத்தில் அவர் தனியாக எடுத்துக் கொண்ட போட்டோக்களை மீடியாக்களுக்கு அனுப்பியுள்ளார்.



## ஐரோப்பிய திரைப்பட விழா - 2013

### கடந்த வார தொடர்ச்சி

அ. யேசுராசா

**நாளை நல்லதாக இருக்கும்**

(Tomorrow will be better) போலந்து.

இப்படத்தின் பெண் நெறியாளரான டொறொற்றா கெட்ஸியர்ஸவஸ்கா, "வாழ்க்கை சிறப்பானதாயும், வித்தியாசமானதாயும், மேலும் அழகானதாயும் எங்காவது இருக்குமென்று நம்மில் பலர் நம்புவதை நான் அறிவேன்." எனக் கூறியுள்ளார். இத்திரைப்படத்தின் மையமும் அந்த நம்பிக்கைதான்!

வீடற்ற, அழுக்கு நிறைந்த மூன்று சிறுவர்கள் - இருவர் பதின்ம வயதினர் மற்றவன் ஆறு வயதுச் சிறுவன் – நாட்டுப்புற ரயில் நிலையத்தில் வசிக்கின்றனர். வாஸ்யாவும் பெதயாவும் சகோதரர் லப்யா நண்பன். "மற்றப் பக்கத்தில் எல்லாம் வளமாக இருக்கும்" என்ற எண்ணம் தோன்றியதில், எல்லை கடந்து செல்ல ஒருநாள் முடிவெடுக்கின்றனர். ர்ய – போலந்து எல்லையைக் கடக்க வேண்டும். ரயிலில் களவாகச்சென்று இடையில் இறங்கி, கிராமங்கள் ஊடாகச் செல்கின்றனர். பலரிடம் இருந்தும், ஏமாற்றியும் உணவைப் பெறுகின்றனர். பல்வேறு மனிதர்கள், அனுபவங்கள், பல்வேறு நிலக்காட்சிகள்....இறுதியில் போலந்து எல்லையை அடைகின்றனர். எல்லையிலுள்ள பொலிஸ்காரன் இவர்கள்மீது அனுதாபங் கொண்டுள்ள போதும், அவர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்! சிறுவர்களின் எதிர்க்குரல் பொருட்படுத்தப் படுவதில்லை!

குறைந்த உரையாடல்களுள்ள படம் இது. காட்சிப்படுத்தல்களே அதிகம். "சிறு பராயத்தினதும் நம்பிக்கையினதும் அழகிய காட்சிக் கவிதையான இது, சினிமாவை 'ஏழாவது கலை'யென அநேகர் ஏன் கருதுகின்றனர் என்பதை, மீண்டும் ஒருமுறை எனக்கு நினைவு ஊட்டியது" என ஒருவர் குறிப்பிட்டுள்ளார்! மூன்று சிறுவர்களதும் அநாதரவுத்தன்மையும், குறும்புகளும், சுதந்திரத்தன்மையும் அவர்களின் நடிப்பில் நன்கு வெளிப்படுத்தப் படுகின்றன. அதிலும் முன்பற்கள் இல்லாத – அழுக்கு முகம்கொண்ட - தம்பியின் சிரிப்பும் குறும்புகளும் மனதில் நன்கு பதிவன. 61ஆவது பெர்லின் திரைப்பட விழாவில், சமாதானத்துக்கான திரைப்பட விருதை இப்படம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கது!

**கிளாராவும் கரடிகளின் இரகசியமும்**

(Clara and the secret of the bears) சுவிற்சர்லாந்து.

யதார்த்தமும் மாய யதார்த்தமும் கலந்துள்ள படம் இது. பதின்மூன்று வயதான கிளாரா, தாயுடனும் மாற்றாந் தகப்பனுடனும் மலைப்பண்ணை யொன்றில் வசிக்கிறாள். அவளது உணர்திறனும் பார்வையும் வித்தியாசமானவை இயற்கையுடன் ஒன்றியிருக்கும் பண்புகொண்டவள். ஒருநாள் புல்வெளியில் கரடிக்குட்டி யொன்றைக் காண்கிறாள். இருநூறு வருடப் பழைமையான சப்பாத்து ஒன்றின் மூலம் இருநூறு ஆண்டுகளின் முன் வாழ்ந்த சுசான்னா என்னும் இளம்பெண்ணின் தொடர்பு கிடைக்கிறது. பின்னர் அவள் கொள்ளும்

(தொடரும்...)

ஜீவநதி

## அமிதாப் - ஜெயபச்சன்


பாலிவூட்டில் அமிதாப்பும் நடிகை ரேகாவும் பல வெற்றிப்படங்கள் கொடுத்த ராசியான ஜோடிகள். இருவரும் காதலித்து திருமணம் நடைபெறவிருந்த சமயம் திடீரென சக நடிகையான ஜெயாபச்சன் அமிதாப்பை திருமணம் செய்து கொண்டார். அதிர்ச்சியடைந்த ரேகா அன்று முதல் ஜெயாவுடன் பேசுவதை நிறுத்திவிட்டார்.



இந்நிலையில் சமீபத்தில் வாழ்நாள் சாதனையாளன் விருது கொடுக்கப்பட்டது. அந்த விழாவுக்கு ரேகாவும் வந்திருந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் கை குலுக்கி சிரித்துக் கொண்டாலும் டென்ஷனுடன் தான் இருந்தனர் இருவரும். விருதை வாங்கிக் கொண்டு வரும்போ கூட டென்ஷனில் தான் இருந்தார். அமிதாப் தன் மனைவியின் டென்ஷனை குறைப்பதற்காக ரேகா முன்பு திடீரென் தன் மனைவிக்கு லிப்கிஸ் கொடுத்துவிட்டார். அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

முத்தக் காட்சியை கண்ட ரேகா கடுப்பாகிய ரேகா உடனே நிகழ்ச்சியை விட்டு வெளியேறினார். அதன் பின்னர் ஜெயபச்சன் சிரித்து சந்தோசமாக இருந்தார்.

## சிரித்துப் பேசினால் சிம்புவுடன் காதலா - நயன்தாரா பேட்டி



பாண்டியராஜ் படப்பிடிப்பில் சிம்புவுடன் சிரித்துப் பேசினால் உடனே எங்களுக்கு மீண்டும் காதல் ஏற்பட்டு விட்டதாக தகவல் பரப்பிவிடுவதா என்று நயன்தாரா கோபத்தில் உள்ளாராம். முன்னாள் காதலர்களான சிம்புவும், நயன்தாராவும் பல ஆண்டுகள் கழித்து மீண்டும் ஒன்று சேர்ந்து பாண்டியராஜ் படத்தில் நடித்துள்ளனர். படப்பிடிப்பில் நயனும், சிம்புவும் சிரித்துப் பேசிக் கொண்டார்களாம். அவர்கள் பழகும் விதத்தை பார்த்து படக்குழுவினர் அவர்களுக்குள் மீண்டும் காதல் ஏற்பட்டுவிட்டதாக கூறி வருகிறார்களாம்.

இந்நிலையில் சிம்புவும், நயனும் படப்பிடிப்பில் சிரித்துப் பேசும் போட்டோ இணையதளத்தில் வெளியாகியுள்ளது. இதனை அறிந்த நயன் சிம்புவுடன் சிரித்துப் பேசினால் உடனே காதலா, இப்படித்தான் தவறாக பரப்புவதா என கோபத்தில் உள்ளாராம். நயன்தாரா தற்போது ஜெயம் ரவியுடன் சேர்ந்து நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்போனில் இருந்து கணனியை இயங்த வைப்பது எப்படி?

அநேகமாக இணையப் பயனாளர்கள் அனைவருக்கும் Team viewer பற்றி தெரிந்து இருக்கும் பொரும்பாலானோர் கணனியில் இதை பயன்படுத்தியும் இருப்பீர்கள். இதை உங்கள் Android போனுக்கும் பயன்படுத்த இயலும். இந்த Application மூலம் உங்கள் கணனியில் Team viewer இருந்தால் அதன் மூலம் உங்கள் கணனியை உங்கள் Android ∴ போனை பயன்படுத்தி control செய்யலாம்.



இதன் மூலம் உங்கள் கணனியில் ஆன்டிராய்ட் போன் பயன்படுத்தி உங்களுக்கு தேவையான வேலைகளை செய்து கொள்ள முடியும். கணனியில் வரும் File transfer வசதி மட்டுமே அலைபேசியில் இல்லை.

Onlineல் இருக்கும் Team viewer நண்பர்களை காண இயலும் விண்டோஸ், லினக்ஸ், மேக் என்று அனைத்து இயங்கு தளங்களிலும் இயங்க முடியும்.

Keyboard பயன்படுத்தும் வசதியை மிக எளிதாக வழங்கி உள்ளது. இதன் மூலம் கணனியில் உள்ள தரும் வசதிகளை நீங்கள் இதிலேயே செய்யலாம்.

---

## மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அறிவிப்பால் நெருக்கடியை சந்திக்கும் வங்கிகள்

மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது *WindowsXP* இயங்குதளத்திற்கான உத்தரவாதத்தை இந்த வருடம் ஏப்ரல் மாதத்துடன் நிறுத்தவுள்ளதாக அறிவித்திருந்தமை தெரிந்ததே.

இந்நிலையில் உலகெங்கிலும் அதிகளவான கணனிகள் *WindowsXP* இயங்குதளத்தில் இன்னும் இயங்கிக் கொண்டிருப்பதனால் அந்நிறுவனம் இக்கால எல்லையை 2015 ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளது.

எனினும் தற்போது வெளியான ஒரு அறிக்கையின் படி உலகெங்கிலும் உள்ள வங்கி நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படும் 95 சதவீதமான பண இயந்திரங்களில் *WindowsXP* இயங்குதளமே பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




அமெரிக்காவில் மட்டும் 420,000 இற்கும் மேற்பட்ட இயந்திரங்கள் இவ்வியங்குதளத்தினைக் கொண்டுள்ளன.

இதேவேளை 15 சதவீதமான பண இயந்திரங்களில் *Windows7* நிறுவப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.




## விரைவில் உலகை கலக்க வருகிறது சாம்சங் *S5*

புத்தம் புது தொழில்நுட்பங்களுடன் சாம்சங் கேலக்ஸி *S5* வெளிவர இருக்கிறது. ஸ்பெயின் பார்சிலோனா நகரில் வருகிற பிப்ரவரி மாதம் 25 - 27 ம் திகதிகளில் *Mobile World Congress (MWC)* கூட்டம் நடைபெற உள்ளது.

அப்போதே சாம்சங் கேலக்ஸி *S5* வெளிவர இருக்கிறது. சாம்சங் நிறுவனத்தின் வடிவமைப்புப் பிரிவின் துணைத் தலைவர் சமீபத்தில் கொரியாவின் சீயோல் நகரில் நடந்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.



இதன் வடிவமைப்பில் புதிய பொருள் ஒன்று முழுவதுமாக மெட்டல் அமைப்பிலும், இன்னொன்று பிளாஸ்டிக் அமைப்பிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் விலையிலும் வேறுபாடு இருக்கும் என அனுமானிக்கப்படுகிறது.

மெட்டல் அமைப்பில் உருவாகும் போன் கேலக்ஸி எப் (*Samsung Galaxy F* )என அழைக்கப்படலாம்.

இதே நேரத்தில் 5 அங்குல தொடுதிரை, *RAM* , *Exynos* 6 *or* 805 Pr*ocessor*, 16*MP ISOCELL* போன்ற அம்சங்களைக் கொண்டிருப்பதாக ஏற்கனவே தகவல்கள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

### ஆமை மீது சவாரி செய்யும் நாய்



ஆமையின் வேகம் பற்றி அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த ஆமை மீது சவாரி மெதுவாக சவாரி செய்யும் நாய் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. கடந்த வாரம் ரெடிட் இணையதளத்தில் நாயொன்று சாவகாசமாக ஆமை மீது பயணம் செய்யும் வீடியோ ஒன்றினை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பிரபல்யமாகியுள்ள இந்த வீடியோ காட்சி எங்கு எப்போது எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் உறுதியான தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. ஆனால் ஆமை மீதான சவாரி எனும் சிந்தனை அந்த நாய்க்கே தோன்றியிருக்கலாம். ஆமைச் சவாரிப் போக்குவரத்துக்கு நாய்கள் பழக்கப்பட்டு விட்டால் எங்கும் அதனால் விரைந்து செல்ல முடியாது என வேடிக்கையாகக் கூறுகின்றனர் அவ் வீடியோ காட்சியை பார்த்தவர்கள்.

---




**இப்போது இரண்டாவதாக நிற்பவனின் முன் அவர் நின்றார்....... அவனை உற்று நோக்க.... அவனை அவருக்கு மிகவும் தெரிந்தவனாகத் தோன்றியது... அவர் ....... அந்த கத்திக் கடைக்காரர் அவ்விரண்டாமவனை நோக்கி......**

மெதுவாக கையைக் காட்டினார்.

அடையாள அணிவகுப்பின் போது குற்றவாளிச் சந்தேகநபர்கள் இருவரும் கத்திக் கடைக்காரர் உள்நுழையும்போது தமது இடங்களை மாற்றிக் கொண்டனர் என்பது இங்கு முக்கியமானது. அவற்றில் முதலாம் இடத்தில் அலிகவும் 9வது இடத்தில் டொடியும் இருந்தனர்.

ஆனால் கத்திக் கடைக்காரர் தற்போது காட்டிய அடையாளம் 2ம் இடத்தில் நின்றவரையே........ ஏன்?.....

கத்திக்கடைக்காரர் உள்நுழையும்போது நீதித்துறையினரால் அவருக்குப் பணிக்கப்பட்டிருந்தது யாதெனில் அவருக்கு தெரிந்தவர்களை அடையாளம் காட்டுமாறே...

இரண்டாமிடத்தில் இருந்தவரும் கத்திக் கடைக்காரரிடம் அடிக்கடி சிறு பொருட்களைக் கொள்வனவு செய்யும் ஓர் சாமானியனே.... அவ்வாறாயின் அச்சாமானியன் அடையாள அணிவகுப்பிற்கு ஏன் வருகை தந்திருந்தான்?.....

அடையாள அணிவகுப்பிற்கு வருபவர்களுக்கு குறிப்பிட்டதொரு தொகைக் காசு அரச சன்மானமாக வழங்கப்படுவதுண்டு. அதனைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பலர் அடையாள அணிவகுப்புப் போலிகள் ஆக அழைக்கப்படும் போதெல்லாம் நீதிமன்றுக்கு வருகை தருவதுண்டு. அதன்பாற்பட்டே அச் சாமானியனும் அவ்வடையாள வகுப்பில் உட்படுத்தப்பட்டிருந்தான்.

அவ்வாறாயின் அடையாள அணிவகுப்பில் உட்படுத்தப்படும் சாமானியர்கள் அடையாளம் காண்பவரால் காட்டப்பட்டால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கேள்வி எழலாம். அவ்வாறு காட்டப்படுபவர்கள் மீது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை என்பதே சட்ட ஏற்பாடுகள் ஆகும்.

இப்போது இரண்டாவது நிலையிலிருந்த நபரை அடையாளம் காட்டிய கத்திக் கடைக்காரர் அடுத்துள்ளவர்களை நோக்கி நடக்கத் தொடங்கினார். அவர் நடந்து செல்லச் செல்ல எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது.... ஆறு.... ஏழு... எட்டு.... எட்டு....எட்டு...... ஒன்பது.....

அவருக்கு அவனைத் தெரிந்திருந்தது. எனினும் கடந்து போன சுமார் ஆறு சாமானியர்களிலும் எவரையுமே அவருக்குத் தெரியாது என்பதால் எழுந்த சோர்வும். அவரது மூளையில் எழுந்த முன்னுணர்வும் அந்த ஒன்பதாம் நபரையும் தாண்டிப்போக தூண்டியது... எனினும் அவ்வுணர்கள் அனைத்தையும் புறமொதுக்கி.... அவனைத் தாண்ட முற்பட்ட போது அவரது புலனுணர்வு விளித்துக்கொண்டது....

அவனை அவருக்குத் தெரியும்.... அவன் அவருடைய கடையில் கத்தியை வாங்கிய அதே இளைஞன்

கண நேரத் தாமதத்தின் பின்...சிந்தனையின் பின் தீர்க்கமாக அவர் அவனை அடையாளம் காட்டினார்.

அதன் பின்னர் முழு விழிப்புடன் அடுத்துவரும் சாமானியர்களைத் தாண்டி அவர் பயணித்தார்..... இலக்ககங்கள் வழமைபோல அதிகரித்தன... பதினைந்து....பதினாறு..... அதன் பின்னர் எண்ணிக்கொள்வதற்கு எவரும் இல்லை.

அவரது பணி நிறைவுற்றது. அவர் திரும்பி நீதித்துறையினரின் முன்னர் நின்றார். அவரிடம் சில கேள்விகள் தொடுக்கப்பட்டன.

" உங்களுக்குத் தெரிந்த இருவரா அங்கிருக்கின்றார்கள்?"

" ஆம்...ஐயா"

" முதலாமவர் ...அதாவது இங்கிருந்து இரண்டாவது நிலையில் நிற்பவர் என்ன உங்களது கடையில் வாங்கினார்?"

" அவர் எப்போதுமே சிறு விளையாட்டுப் பொருட்களை வாங்குபவர்"

"அடுத்தவர் உங்களிடம் என்ன பொருளை வாங்கினார்?"

"ஒரு கத்தியை வாங்கினார்"

" சரி நீங்கள் போகலாம்"

அத்துடன் அந்த அடையாள அணிவகுப்பு நிறைவு பெற்றது.

அமைதியான அந்த நேரத்தில் நீதித்துறையிடம் இருந்து அவ்வடையாள அணிவகுப்பில் சட்டபூர்வமாகக் கலந்து கொண்ட யாருக்காவது ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்கின்றதா? என்ற கேள்வி தொடுக்கப்பட்டது.

அமைதியாகக் கணமொன்று கழிகின்றது..... அவ்வமைதியைக் கிழத்துக்கொண்டு குரல் ஒன்று வெளிப்பட்டது

" ஆம்...ஆட்சேபனைகள் உள்ளன.... "

அக்குரலுக்குரியவர் சந்தேக நபர்களின் சார்பில் வந்திருந்த சட்டத்தரணிகளின் தலைவர்....

" மொழியுங்கள் உங்கள் ஆட்சேபனையை.... "

நீதித்தரப்பிடமிருந்து கிடைத்த அனுமதியை அடுத்து அவர் தனது ஆட்சேபணையை மொழிந்தார்.

சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதை தொலைக்காட்சிகள் ஒலிபரப்பியுள்ளன. அவற்றில் அவர்கள் இருவரும் காட்டப்பட்டுள்ளார்கள்.... அவர்களது புகைப்படங்கள் எடுக்கப்பட்டு சிலருக்குக் காட்டப்பட்டுள்ளது.... சம்பவம் நடந்த இடத்திற்கு சந்தேக நபர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளர்கள்..... அங்கும் பெருமளவு மக்கள் அவர்களைக் கண்டுள்ளார்கள்......

எனவே இவ்விரண்டு சந்தேக நபர்களும் ஏற்கனவே அனைவுருக்கும் தெரிந்தவர்களாக உள்ளர்கள்....

அத்துடன் கொலை நடந்து சுமார் இரண்டு மாதங்களின் பின்னரே இவ் அடையாள அணிவகுப்பு இடம்பெறுகின்றது என்பதை கருத்திற் கொள்ள வேண்டும்" என்றோய்ந்தது அக்குரல்.........

அவரது குரலுக்கு சமாந்தரமாக சுருக்கெழுத்தாளர் அவரது ஆட்சேபணையை குறித்தோய்ந்தார்....

" இன்னும் ஆட்சேபகைள் ஏதும் உண்டா?"

"இல்லை"

" அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்ட அனைவருக்கும்....

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## கூடைப்பந்தாட்ட கூட்டம்

-தேவ அச்சுதன்-

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் புதிய தலைவரான அருட்தந்தை சகாயநாதன் எஸ்.ஜே தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்டத்துறையை மேம்படுத்தும் வகையில் இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மாவட்டத்தின் சகல கழகங்களும் கலந்துகொண்டன.

மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் புதிய தலைவராக கடந்த வாரத்தில் அருட்தந்தை சகாயநாதன் எஸ்.ஜே தெரிவு செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் நடைபெற்ற சங்கத்தின் புனரமைப்புக் கூட்டத்திலேயே இவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். மாவாட்டத்துக்கான கூடைப்பந்தாட்ட தெரிவுக்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன் தெரிவித்தார்.

## திறமையானவர்களை அடையாளம் காண நடவடிக்கை

-தேவ அச்சுதன்-

இலை, மறை காயாகவுள்ள விளையாட்டு வீரர்களை இனங்காணும் வகையில் கால்டன் விளையாட்டு வலையமைப்பு திறமைமிக்க இளைஞர்களை இனங்காணும் தனது வேலைத்திட்டத்தினை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் நடத்தவுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ்டன் நடைபெற்ற கலந்துரையாடலில், கால்டன் விளையாட்டு வலையமைப்பின் திட்டப்பணிப்பாளர் மல்கம் பெரேரா, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் கே.முருகானந்தம், மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் என்.ஆர்.ரஞ்சன், செயலாளர் விவேகானந்த பிரதீபன், மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்த்தர் வி.ஈஸ்வரன், மாகாண பயிற்றுவிப்பாளர் மஞ்சுள கருணாரத்ன, மாவட்ட பயிற்றுவிப்பாளர் அன்வர் டீன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதற்கமைவாக, கால்பந்தாட்டம், கிரிக்கெட், வலைப்பந்து, கூடைப்பந்தாட்டம் போட்டிகள் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக நடைபெறும்.

இதில் கழக மட்டம், தனிப்பட்ட, பாடசாலை மட்டங்களிலுள்ளவர்களும் பங்குபெற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம், கல்வி அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுகளின் முழுமையான ஒத்துழைப்புடன், இலங்கை கிரிக்கெட், இலங்கை கால்ப்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை றக்பி, இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை கரப்பந்து சம்மேளனம், ஆகிய தேசிய சம்மேளனங்களின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படவிருந்து.

இதில் பாடசாலை மாணவர்களும் பங்கு பெறும் வகையில், வடிவமைக்கப்பட்டுள்ளது. 15 வயது முதல் 25 வயது வரையான இளைஞர் யுவதிகளில் இவ்விளையாட்டுக்களில் பங்கு பெறமுடியும்.

## மார்பகப் புற்று நோய்க்கு எதிராகப் பந்து வீசும் மக்ராத்

தனது இளம் காதல் மனைவியை இழந்துபோய் சின்னஞ் சிறு குழந்தைகளுடன் மக்ரா தவித்துப் போய் நின்றதைப் பார்த்த கிரிக்கெட் உலகமே கலங்கியது. எத்தனையோ தடவைகள் ஆஸ்திரேலிய அணியை தனது மன உறுதியாலும் தொடர் பந்து வீச்சாலும் தோல்வியில் இருந்து காப்பாற்றிய அந்த வீரனால் இயற்கையுடன் போராடி தனது அன்பு மனிவியைக் காப்பாற்ற முடியவில்லை.

மக்ராவின் மனைவிக்கு முதலில் மார்பகப் புற்றுநோய் என்று உறுதிசெய்யப்பட்டு அதற்கான சிகிச்சைகள் ஆரம்பிக்கப் பட்ட போது அவர் அதை துணிவுடன் எதிர்கொண்டார். அப்போது அவருக்கு வயது 31. இரண்டு சின்னக் குழந்தைகளுடன் அந்தக் கொடிய நோயின் வேதனையுடனும் அதற்காகக் கொடுக்கப்பட்ட தாக்கங்கூடிய சிகிச்சையின் போதும் அந்த இளம் தாய் உடலாலும் மனதாலும் நொருங்கிப்போனாலும் அந்த நோயை எதிர்த்து எப்படியும் வெளியே வந்து தீருவேன் என்ற வைராக்கியத்துடன் போராடிக்கொண்டிருந்தபோதுதான் அவருக்கு மார்பக புறுநோய் வந்தவர்களைப் பராமரிப்பதற்காகவே விேடமாக பயற்றுவிக்கப்பட்ட நர்ஸ் ஒருவரின் அறிமுகமும் அதன் மூலம் அவரின் உதவியும் கிடைக்கப்பெற்றது. அதன் பின் அவரின் மனத்திலும் உடலிலும் ஏற்பட்ட மாற்றங்களை அனுபவ பூர்வமாக உணர்ந்த ஜேன் வசதியானவராக இருந்த காரணத்தால் தனக்குக் கிடைத்த அந்த பராமரிப்பு மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்திரேலியாவில் வாழும் அத்தனை பேருக்கும் கிடைக்கும் படி செய்தல் வேண்டும் என்று மக்ராவிடம் கேட்டுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் Mcgrath Foundation என்ற ஒன்றிற்கான விதையையும் போட்டிருந்தார்.

2008 இல் ஜேன் மக்ராவின் இழப்பு மக்ராவின் மனதினுள் தனது மனைவியின் கனவை விரிவுபடுத்தி நிஜமாக்க வேண்டும் என்ற வைராக்யத்தை ஏற்படுத்தியிருந்தது. அதன் காரணமாக தனது ஊாயசவைல யின் உருவாக்கம் அதன் செயற்பாடு எதிர்காலத் திட்டம் போன்றவற்றை ஊடகங்களுக்கு தானே நேரே சென்று விளக்கத் தொடங்கினார்.

சில வருடங்களுக்கு முன்னர் கிரிக்கெட் போட்டியொன்றின் உணவு இடைவேளையில் ஆஸித் தொலைக்காட்சியான சனல் 9 இன் வர்ணனையாளர்களுடன்........


கிரிக்கட் கிறுக்கனின் கிறுக்கல்கள் தொடரும்......

## மில்கோகப் உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் நிலை வென்ற புனித சூசையப்பர் கல்லூரி - திருகோணமலை



## ஜெயம்பாலகம்

### குறுக்கெழுத்து புதிர்- 004



**இடமிருந்து வலமாக**

1. பாண்டியரும் பல்லவரும் பிறருக்கு வழங்கிய தானங்களை குறிக்கும் கல்வெட்டு
2. புகழை இவ்வாறும் கூறுவர்.
4. பரமசிவனை இவ்வாறும் அழைப்பர்.
5. நாடெங்கிலும் இவ் நடிகை மேற்கொள்ளப்படுகிறது (திரும்பியுள்ளது)
7. சீரான சமிபாட்டிற்கு உணவை இவ்வாறு உண்ண வேண்டும்.
8. சூதாடும் கருவி (குழம்பியுள்ளது)
10. காயத்ரி மந்திரத்தை இவ்வாறும் அழைப்பர்.
12. வரலாற்றினை சரியாக அறிவதற்கு இத்தகைய ஆய்வினை மேற்கொள்வர் (திரும்பியுள்ளது)
14. தலதாமாளிகை அமைந்துள்ள இடம்
15. வாழ்வில் முன்னேற இது இருக்க கூடாது.
16. சேர மன்னனை இவ்வாறும் அழைப்பர். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழாக**

1. அரசன் உடன் இருக்கும் காவலன்.
2. இசைப்பாட்டினை இவ்வாறும் அழைப்பர்.
3. ஒருவித தாதுப்பொருள்.
4. விஜய் நடித்த படங்களில் ஒன்று
5. சாத்வீக போராட்டங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
6. கார்த்திகை தீபம் அன்று இவ்விளக்கை கொண்டு அலங்கரிப்பர்.
9. பாண்டிய மன்னர் நீதி கேட்ட கண்ணகியின் முன் இவ்வாறு நின்றார். (குழம்பியுள்ளது)
11. திருவாதிரை நாளில் சிவனின் கோலத்தை ஆனந்த.................... என்று அழைப்பர்.
12. கலியுகத்தில் இது தலை தூக்கி உள்ளது.
13. மகத நாட்டினரை இவ்வாறும் அழைப்பர்.
17. விண்வெளிக்குச் சென்ற முதல் ஈழத்தமிழ் பெண்.

### குறுக்கெழுத்து புதிர்- 003ற்கான விடைகள்

**இடமிருந்து வலமாக**

1. இலங்கேஸ்வரன்
2. பயோததி
3. அருமருந்து
5. குருகுலம்
6. திருமணிமாலை
10. சுற்றம்
11. மடி
14. கடன்
15. சிறுவித்தகம்
17. விருது
19. கட்சி

**மேலிருந்து கீழாக**

1. இன்பம்
3. அருவி
4. கவி
5. குறத்தி
7. மகுடம்
8. வசுந்தரை
9. கிண்கிணி
12. வியமம்
13. மாசிகம்
16. விடா
18. துறக்கம்

**போட்டி முடிவு திகதி: 30.01.2014**

✱ விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்

✱ முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250/=, 150/=, 100/= பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

✱ இப்போட்டியில் ஜெயம் பாலகம், மலைமுரசு ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய உறவினர்களும் பங்குபற்ற முடியாது.

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:-
ஜெயம் குறுக்கெழுத்துப் போட்டி. இல -001
32, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் யார் சொல்வதோ?

சாந்தி சச்சிதானந்தம்

வடமாகாணசபை தெரிவு செய்யப்பட்டதன் பயனாக அங்குள்ள மக்களின் அபிவிருத்திக்கு சில வாய்ப்புக்கள். திறந்து விடப்பட்டிருக்கின்றன என்று அபிப்பிராயப்படுபவர்கள் பலர். இந்தக் கருத்தின் அடிப்படையிலேயே கடந்த ஜனவரி மாதம் 10ந் திகதி யாழ்ப்பாணத்தில்" வடக்கினை ஜனநாயகமயப்படுத்தல்: ஆளுகை, அபிவிருத்தி நலிவுத்தனமை என்பன பற்றிய கலந்தரையாடல்" என்கின்ற தலைப்பில் கொழும்பின் இனத்துவக் கற்கைக்கான சர்வதேச நிலையமானது ஒரு நாள் செயலமர்வினை ஏற்பாடு செய்திருந்தது. ஆளுகை, அபிவிருத்தி, நலிவுத்தன்மை ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்ட விடயங்களாகும். மக்கள் பங்கேற்கும், அவர்களுக்குப் பொறுப்பக் கூறும் வெளிப்படைத்தன்மை மிக்க ஆளுகை இன்றி சகலருக்குமான அபிவிருத்தி ஏது? அதே நேரம், நலிவுற்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் ஆளுகையை பலப்படுத்தும் வழி ஏது? எனவேதான் ஒன்றின் மீதொன்று செல்வாக்குச் செலுத்தும் இம்மூன்று முக்கிய காரணிகளையும் எடுத்து இந்த செயலமர்வு நடத்தப்பட்டது பொருத்தமாகக் காணப்பட்டது. வட மாகாணத்தின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உட்பட வட மாகாணசபையின் கல்வி அமைச்சர், முன்னாள் வட கிழக்கு மாகாணசபையின் உதவிப் பிரதம செயலாளர், மற்றும் ஆய்வாளர்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் போன்ற பலர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொண்ட இவ்வரங்கில், மாகாண சபை உறுப்பினர்கள், அரச நிர்வாகிகள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் போன்றோரும் பங்குபற்றியிருந்தனர். இதனை ஆரம்பித்து வைத்த இனத்துவ கற்கை நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான திரு மறியோ கோமஸ் அவர்கள, 2009ம் ஆண்டு யுத்த முடிவும் அதன் பின்னர் 2013ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட வட மாகாணசபையும் சமீப காலங்களில் நிகழ்ந்த இரு முக்கிய வரலாற்றுச் சம்பவங்களாக எடுத்துக் காட்டி, இதன் பின்னான வட மாகாண மக்களின் அரசியல் அபிவிருத்திப் போக்குகளை நெறிப்படுத்த உதவுவதற்கான கலந்துரையாடல் இது என விளக்கம் அளித்தார்.

பேச்சாளர்களின் கருத்துக்களும் இதனுடன் உடன்பட்ட கருத்துக்களாகவே காணப்பட்டன. "யுத்தகாலங்களில் வெளி நடப்புக்கள் அறியாதவர்களாக, புதிய அரசியல் நிர்வாக வரைவிலக்கணங்களினதும் சொற் பதங்களினதும் தாற்பரியங்களை அறியாதவர்களாக வாழ்ந்து விட்டோம். அந்த வகையில் எம்மை இம் முறைவழிகளைக் கற்றுக்கொள்ளும் பாதையில் செல்ல உதவும் இனத்துவக் கற்கைக்கான சர்வதேச நிலையத்துக்கு நன்றி" என்றே முதலமைச்சர் தனது உரையினை ஆரம்பித்தார்.

இக்கருத்தரங்கில் பேசப்பட்ட விடயங்கள் பல கேட்பவர்களின் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் அமைந்தது மறுக்க முடியாததாகும். "ஓர் ஜனநாயக சட்டகத்தில் செயற்படுத்தும் அதிகாரத்தின் மூலமும், அந்த அதிகாரத்தின் வழியே செயற்படுத்தப்படும் திட்டங்களின் பயனாளிகளும், மக்களே. எனவே ஆளுகைக்கான கட்டமைப்புக்கள் அதன் நம்பிக்கைப் பொறுப்பு வாய்ந்தவர்கள் (trustees) மக்களுக்கு நன்மைகளைச் செய்வதற்கான சட்டகமேயன்றி வேறில்லை. இவ்வாறு நோக்கினால், ஆளுபவர்கள் ஆளப்படுபவர்கள் என்கின்ற பாரம்பரிய நோக்கிலிருந்து வேறுபட்டு நாம் ஜனநாயகம் என்பதனை நம்பிக்கைப் பொறுப்பு இரண்டறக் கலந்திருக்கும் (மக்களும் அவர்களுக்கு சேவை செய்வதற்காக அதிகாரம் கொண்டிருப்பவர்களும்) ஒன்றிணைந்த முறைவழியாகப் பார்க்கலாம். இதனால்தான் வடக்கில் நிர்வாகத்திலிருந்து இராணுவம் விலக்கப்படவேண்டும் என நாம் கோருகின்றோம்.." என நல்லாளுகை பற்றிய தனது விளக்கத்தினை முன்வைத்தார் முதலமைச்சர்.

இவருக்குப் பின் பேசிய அகிலன் கதிர்காமர் அவர்கள், மீள் கட்டுமானம் பனர்வாழ்வு போன்ற முறைவழிகளில் ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தினார். தமிழ் மக்கள் சுய மீளாய்வினை மேற்கொள்ள வேண்டும் என்றும், தம் மத்தியில் சாதீய பாகுபாடுகளைக் களைய முன்வரவேண்டும் என்றும் கோரினார். வழங்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் சகலருக்கும் சென்று சேரவேண்டுமெனில், சாதி வர்க்கப் பாகுபாடுகளுக்கு அப்பால் சகலரும் பங்கேற்கும் அபிவிருத்தி முறைவழிகள் கண்டு பிடிக்கப்பட வேண்டும் என்பது இவருடைய உரையின் உட்கருத்தானது.

மாகாண சபையின் நிதிக் கையாளுகையைப் பற்றிப் பேசிய முன்னாள் வட கிழக்கு மாகாண உதவிப் பிரதம செயலாளர் திரு கிருஷ்ணானந்தன் அவர்கள், இது தொடர்பாக மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைக்குமிடையிலான முரண்பாடுகளை விளக்கி ஆனால் இத்தனை தடைகளுக்குள்ளும் சில வாய்ப்புக்கள் இருக்கத்தான் செய்கின்றன எனத் தனது உரையை முடித்துக்கொண்டார்.

அபிவிருத்தியைப் பற்றிய உரைகளும் அதன் பல அம்சங்களைத் தொட்டன. வடக்கு இளைஞர்கள் பாரம்பரியமாக செய்யப்படாத வேலைகளின் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளுவதில் காட்டும் அசிரத்தைகள், நிர்வாகிகளது எதேச்சாதிகாரமான மனப்பாங்குகள், புலம்பெயர் தமிழ் மக்களது உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஒருமுகமான செயற்பாடு இல்லாமை போன்ற பல விடயங்கள் இதில் அலசப்பட்டன. நலிவுத்தன்மை என்னும் விடயத்தின் கீழ் பேசிய வட மாகாண கல்வி அமைச்சரின் உரையும் உளநோய் வைத்தியரான வைத்திய கலாநிதி கணேசனின் உரையும் இவ்விடயங்கள் பற்றிய பல பெறுமதியான தகவல்களைத் தந்தன.

ஒவ்வொரு உரைக்குப் பின்னரும் நடந்த கலந்துரையாடலில் பார்வையாளர்கள் தமது கேள்விகளை வீசியும் கருத்துக்களைக் கூறியும் பங்குபற்றிய விதம் யாழ் மாவட்டத்தில் இவ்வகையான செயலமர்வுகளின் தேவையையே எடுத்துக் காட்டிற்று. முதலமைச்சரின் நல்லாளுகை பற்றிய விளக்கத்தினைப் பலரும் சிலாகித்துப் பேசினர். பேச்சாளர்களின் கருத்துக்களை மேலும் ஊக்குவிப்பதற்கான பல கருத்துக்களும் யுக்திகளும் முன்வைக்கப்பட்டன.

இதில் முதலமைச்சரை நோக்கித்தான் நீண்ட நேரம் கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை. இக்கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போது அவரும் தமது நிர்வாகத்திற்கு தகுந்த ஆளணி இல்லாத குறையையும், ஒவ்வொரு துறைகளிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் தமக்கு உதவியாக இல்லையென்பதையும் கூற மறக்கவிலலை. மாகாணசபைகளுக்கு மத்திய அரசாங்கம் ஒதுக்கும் நிதிகள் நிர்வாகத்துக்கு மட்டுமே போதுமானதாகவும், வரியினூடான வருமானம் மிகக்குறைவாக இருக்கின்றதுமான நிலையில், புலம்பெயர் சமூகத்தின் நிதியுதவியுடன்தான் இயங்கலாம் என்கின்ற முடிவுக்குத் தாம் தள்ளப்பட்டதாக அவர் கூறினார். இந்த விடயமே பிற்பகுதியில் எதிர்காலச் செயற்பாடுகள் என்பது பற்றி கலந்துரையாடப்பட்டபொழுது பலராலும் குறிப்பிடப்பட்ட விடயமாகியது.

வட மாகாணசபை சிவில் சமூகத்துடன் ஒரு தொடர்பினையும் பேணாது தனித்து நிற்கின்றது எனச்சிலர் அபிப்பிராயப்பட்டனர். பல்கலைக் கழகங்களைச் சார்ந்த அறிஞர்கள், சமூகப் பணியில் அனுபவம் வாய்ந்த சிவில் சமூகப் பிரதிநிதிகள், அனுபவம் வாய்ந்த ஓய்வு பெற்ற அரச அதிகாரிகள் போன்றோர் அடங்கிய ஒரு நிபுணத்துவக் குழு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அது வட மாகாண சபைக்கான ஆலோசனைக் குழுவாகச் செயற்பட வேண்டும் என்பதும் அங்குள்ள பெரும்பான்மையினரின் கருத்தாகியது.

காலஞ்சென்ற பேராசிரியர் துரைராஜா அவர்கள் தான் தலைமை வகித்து நடத்திய தன்னார்வத் தொண்டரடங்கிய அபிவிருத்திக் குழுவினைப் போன்று இக்குழு செயற்பட்டு ஒரு ஆறு மாத காலங்களிலேயே புலம் பெயர் தமிழ் மக்கள் நிதியுதவி மற்றும் முதலீடு செய்யக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கலாம் எனவும் சிலர் கருதினர். வட மாகாணத்தில் இயங்கும் அரசு சாரா நிறுவனங்கள் இவற்றிற்கான சில உட்கட்டுமான வசதிகளைச் செய்து தரும் வாய்ப்புக்களும் இருக்கின்றன என்பதும் கலந்துரையாடப்பட்டது. இவ்வாறு இயங்கினால் வட மாகாணசபை ஏனைய மாகாணங்களுக்கான முன்னுதாரணமாகவும் திகழலாம் என்றும் கூறினார்கள்.

மொத்தத்தில், கொழும்பு அரசாங்கம் என்னதான் தடைகளை இட்டாலும், தாம் ஒற்றுமையாக ஒன்றிணைந்து இயங்குவதன் மூலம் அதன் நிகழ்ச்சி நிரலைத் தோற்கடிப்போம் என்கின்ற தொனியே எங்கும் கேட்டது. இதற்கான சகல மனித வளங்களையும் தம்மால் திரட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையே எல்லோர் பேச்சிலும் இழையோடிற்று.

ஆனால், இங்கு ஒரு முக்கிய காரணியினை ஒருவரும் கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இவ்வாறு சகல துறையினரையும் இணைத்து இயக்குவதற்குரிய ஓர் அரசியல் தலைமைத்துவம் அவசியம் என்னும் காரணியே அது.

பேராசிரியர் துரைராஜா தனது அபிவிருத்திக் குழுவினை இயக்குவதற்கு விடுதலைப் புலிகள் வழங்கிய அரசியல் தலைமைத்துவம் முக்கியமாக இருந்தது.



பிரச்சினை இதுதான். இவ்வகையான பணியில் சகலரையும் ஒன்று திரட்டும் தரிசனமும் ஆற்றலும் நாம் தெரிவு செய்த அரசியல் தலைமையான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றதா? தனது நிர்வாகம் இயங்குவதற்கு ஆளணியும் நிபுணர்களும் இல்லை என முதலமைச்சர் குறைப்படும்பொழுது அது குறித்து அவருடைய கட்சி என்ன செய்தது என்பதே எமது கேள்வியாகும்.

இதுவரை இவர்கள் வடக்கிலுள்ள சிவில் சமூக அமைப்புக்களைத் திரட்டி அவர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தார்களா? பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்விமான்களுடன் கலந்துரையாடி எதிர்காலத் திட்டங்களைத் தீட்டுவது பற்றியும் புலம்பெயர் சமூகத்தினது முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் பற்றியும் பேசினார்களா? குறித்த நிபுணத்துவம் உள்ள தனி நபர்களைத் தொடர்பு கொண்டாவது இவருக்கான ஆளணிகளைத் திரட்டத்தான் முயற்சித்தார்களா?

நிர்வாகத்தின பல பொறுப்புக்களைச் சுமந்து நிற்கும் முதலமைச்சர் இதையெல்லாம் செய்ய முடியாது. அவருக்குப் பின்னால் அவருடைய கட்சி இயந்திரம் துணை நிற்க வேண்டும். ஆனால், கூட்டமைப்பிற்கே உரிய ஸ்டைலொன்று இருக்கின்றதே. தம்மைச் சேர்ந்தவர்கள் அரசியல் பதவிக்கு வந்தால் அவர்கள் கூட்டாக அதிகாரம் பெறுவதற்கு அதுவே போதுமானதாகும், பிறகென்ன? அவர்களை அம்போவென்று விட்டு விட்டு எல்லோரும் அவரவர் வேலைக்குப் போய்விடுவார்கள். பதில் யார் சொல்வதோ யார் சொல்வதோ?

நன்றி

உலகத்தமிழ் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர
## மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 04 பாடம் - கணிதம்

01. ரூபா 50 பெறுமதியுடைய பேனாவை அதில் உள்ள சிறிய பழுது காரணமாக $\frac{1}{5}$ பங்கு குறைத்து விற்கப்பட்டது. விற்றவிலையைக் காண்க.

02. $72^{\circ}$ இன் மிகை நிரப்பியைக் காண்க.


03. $9+16$ எத்தனையாம் சதுர எண்?

04. காரணிப்படுத்துக.

05. சுருக்குக. $\left(\frac{5}{9}+\frac{1}{2}\right)\div 1\frac{1}{3}$

06. $\lg a+\lg b=5$ எனின், $\lg(ab)^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

07.




இவ்வுருவில் $x, y$ ஐக் காண்க.

08. ஐ பின்னமாக எளிய வடிவில் தருக.

09. 9, 29 என்பவற்றிற்கிடையில் 3 கூட்டல் இடைகளைக் காண்க.

10. தாங்கி ஒன்றின் கால்வாசியில் நீர் உள்ளது. அதிலிருந்து 10 லீற்றர் நீர் அகற்றப்பட்ட போது தாங்கியில் இருந்த நீரின் அளவு $\frac{1}{8}$ ஆகும். தாங்கியின் கொள்ளளவைக் காண்க.

11. சுருக்குக. $\frac{3}{x^2+5x+6}+\frac{1}{x+2}$

12. எனும் சமன்பாட்டின் படித்திறன், வெட்டுத்துண்டை காண்க.


13. $\frac{1}{4}$ லீற்றரை $cm^3$ இல் தருக.

14. $\sqrt{33}$ இன் முதலாம் அண்ணளவாக்கத்தைக் காண்க.

15. $x=5,\ y=-3$ எனில் $x^2y+xy^2+(xy)^2+x^2y^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

16. $5^{2x+3}=125^{x-1}$ எனில், $x$ ஐக் காண்க.

17.





இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

18. விகிதங்களை எளிய வடிவில் தருக. $3\frac{1}{4}$

19. ரூபா 3,000 இற்கு ஆண்டுக்கு $8\frac{1}{2}\%$ படி 14 மாதங்களுக்குரிய வட்டி எவ்வளவு?

20.




$ON=OM$ எனின், க்கு இடையிலுள்ள தொடர்பை எழுதுக.

21. காரணிப்படுத்துக. $2a^2b^2+ab-6$

22. பின்வரும் எண்களை முழு எண்ணில் தருக.
25.95, 102.09

23. பின்வரும் எண்களை சாதாரண வடிவில் தருக.
$2.6\times10^3$, $572.6\times10^{-3}$


கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் T. குமணன்

MATHS
Paper Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
Sir T. Kumanan 0772975953
23. Sivan st Trinco.
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
Exam சகலமாணவர்களும் பங்குபெற்றலாம்.


## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில்
## பரீட்சைக்கான பயிற்சிகள் - 04

1. குரக்கன் போன்ற வித்தின் வடிவத்தையுடைய வித்து எது?
   1. மிளகு 2. கடுகு 3. நோக்கோல் 4. பப்பாசி

2. பெறுமதியின் ஒழுங்கு முறைப்படி பொருட்களைக்கொண்ட கூட்டம் எது?
   1. தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு 2. தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு 3. வெள்ளி, செம்பு, தங்கம், இரும்பு

3. வித்தை அகற்றிய பின், உணவாக சமைக்கும் காய்கறிவகை எது?
   1. கத்தரிக்காய் 2. ஈரப்பலா 3. புடோல் 4. சிறகவரை

4. முகம் பார்க்கும் கண்ணாடியை சுத்தமாக்கப் பயன்படுத்தும் பொருள் எது?
   1. தேயிலைச் சக்கை 2. தேங்காய்ப்பூ 3. விம்சோப்

5. அருண் பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தான். எனினும் அவன் பல நாட்களாகப் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை. இதற்குக் காரணமாக அமையக் கூடியது?
   1. பாடசாலை பஸ் வராதிருந்தமை.
   2. அது பாடசாலை விடுமுறை காலமாக இருந்தமை
   3. அவன் சுகவீனமுற்று இருந்தமை

6. .............. நடைபெறவுள்ள டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சியில் அனுலா கலந்து கொள்வாள்.
   1. இன்டைக்கு 2. இன்றைக்கு 3. இண்டைக்கு

7. மாணவர்கள் தமிழ் புத்தகத்தை ....................
   1. வாசிப்போம் 2. வாசித்தார் 3. வாசித்தார்கள்

8. எதையும் உரிய முறையில் செய்யா விட்டால், அதனால் ஏற்படவுள்ள பயன் குறையும்.
   1. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் 2. ஆறின கஞ்சி பழங்கஞ்சி 3. ஆறிலும் சாவு நூறிலும் சாவு

9. அமாவாசை தினத்தில் பால் போன்ற நிலவொளியில் நிலாச்சோறு உண்டதாக ரிசானா கூறினாள். இது நிகழ வாய்ப்பில்லாததற்கு காரணம்?
   1. இரவில் நிலாச்சோறு உண்பதில்லை
   2. இரவில் பால் போன்று நிலா ஒளி தோன்றாது
   3. அமாவாசையில் சந்திரன் தோன்றாது.

10. உங்கள் பாடசாலையிலிருந்து மிகத்தூர உள்ள இடங்களுக்கு சௌகரியமாக பயணம் செய்ய உதவும் வாகனம் எது?
    1. பேருந்து 2. கார் 3. லொறி 4. புகையிரதம்

11. வெயில் காலங்களில் அதிகளவு உண்ணும் பழவகை எது?
    1. வெள்ளரி 2. மாம்பழம் 3. கொய்யா 4. அப்பிள்

12. ஓர் திருமண வைபவத்திற்கு வருகை தந்த ஆண்களின் எண்ணிக்கை 749 ஆகும். அங்கு வந்த பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 151 அதிகமாகும். வந்த பிள்ளைகளின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 54 குறைவாகும். எனின், அத்திருமணத்திற்கு வந்த மூவரினதும் கூட்டுத்தொகை யாது?
    1. 2344 2. 2398 3. 2290

13. ராதா கடையில் 2மீ துணியும், 175செ.மீ துணியும் வாங்கினாள். எனில் அவள் வாங்கிய மொத்தத் துணியின் அளவு யாது?
    1. 2மீ 175செ.மீ 2. 375மீ 3. 375செ.மீ

14. மண்ணினுள் புதைக்கும் போது மிக நீண்ட காலம் பிரிகையடையாது, சூழலை மாசடையச் செய்யும் பதார்த்தம் எது?
    1. விலங்குக்கழிவு 2. பிளாஸ்ரிக்கு 3. கண்ணாடி 4. பருத்தி இழை

15. இரு தூண்களை இணைத்துக் கட்ட 3மீ கயிறு தேவை. 15 தூண்களை இணைத்துக்கட்ட தேவையான கயிற்றின் நீளம் எவ்வளவு?
    1. 45மீ 2. 42மீ 3. 39மீ

16. ஒரு மோட்டார் சைக்கிள் 10 கிலோமீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு 20 நிமிடம் எடுத்தது. எனில், இதே கதியில் மோட்டார் சைக்கிள் சென்றால் 15 கிலோமீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு எவ்வளவு நேரம் தேவைப்படும்?
    1. 10நிமிடம் 2. 20நிமிடம் 3. 30 நிமிடம்

17. ஒரு தண்ணீர்த்தாங்கியில் 30 லீற்றர் நீர் உள்ளது. இத்தாங்கியிலிருந்து 05 நிமிடத்தில் ஒரு லீற்றர் நீர் வெளியேறும் எனில், தாங்கியிலிருந்து நீர் முழுவதும் வெளியேற எவ்வளவு நேரம் தேவை?
    1. 2மணி 30 நிமிடம் 2. 3 மணி 20 நிமிடம் 3. 3 மணி 30 நிமிடம்

18. 'மிகவும் வறியவர்' என்பதை விளக்கும் இன்னுமொரு இணைமொழி எது?
    1. அருமை பெருமை 2. ஏழை எளியவன் 3. இன்ப துன்பம் 4. அணை துணை


புலமைப் பரிசில் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் திரு. ந. மனோகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய நியமனத்தில்...

வழங்கப்பட்ட நியமனமானது பத்திரிகையில் கேட்டுக்கொண்ட தகைமைகளின் அடிப்படையில் வழங்கப்படவில்லை. மாறாக குறைவான மற்றும் எங்களைக் போன்று அதே தகமைகளைக் கொண்ட பட்டதாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கேட்டுக்கொண்ட நான்கு வகையான தகைமைகளின் அடிப்படையில் முதலாம் வகையான தகைமைகளைக் கொண்ட மாணவர்களுக்கும் இந்நியமனம் வழங்கப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்து சிறந்த தீர்வினை பெற்றுத் தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் 44 பட்டதாரிகளுக்கு தகவல் தொழில்நுட்பத்திற்காக வழங்கப்பட்ட நியமனத்தில் 02 பட்டதாரிகள் மாத்திரமே பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்ட முதலாவது தெரிவு செய்யும் தகமைகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அரசியல்வாதிகளின்......

அவர், சர்வதேசம் என்று சொல்லிக் கொண்டு போவதில் எப்பயனும் ஏற்படப்போவதில்லை என்பதை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். எமது பிரச்சினையை நாமே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

அண்மையில் இலங்கை வந்திருந்த பிரித்தானியப் பிரதமர் பிரதமர் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். அங்கு ஒரு வீட்டைக் கூடக் கட்டுவதற்கு உதவி செய்யாத அவர் அங்குள்ள நிலைமை பற்றிக் கருத்து கூறுகின்றார். சில அரசியல்வாதிகள் அறியாமையின் காரணமாகவே சர்வதேசம் சர்வதேசம் என்று செல்கின்றனர்.

நாட்டில் நிலவும் அமைதிச் சூழலைக் குழப்பும் வகையிலேயே சில சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன. குறிப்பாக பிரித்தானியா, ஈராக் போன்ற நாடுகளில் கால்வைத்து அங்குள்ள நிலைமையைக் குழப்பி விட்டுள்ளது. எனினும் இலங்கையில் பயங்கரவாத முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் எவ்வித குழப்பமும் ஏற்படவில்லை. இச்சமாதான சூழலைக் குழப்பவே சிலர் முயற்சிக்கின்றனர். இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு இடமளிக்காது என்றார்.

## அமெரிக்காவின்....

இலக்கைச் சுடுகலனின் பார்வைக் கூட்டிற்குள் பொருத்தப்பட்டுள்ள சிறிய கணணிக்குத் தெரியப்படுத்துவார். அவ்விலக்கினை கிளர்கதிர் (லேசர்) நுட்பத்தின் ஊடாகத் தெளிவாக விளங்கிக் கொள்ளும் கணணி இலக்கைத் தானாகவே குறிபார்த்து சுடும்.

500 யார் தூர வரையறைக்குள் இருக்கும் இலக்குகளைத் தாக்கவல்ல இச்சுடுகலன் மணிக்கு 10 மைல் வேகத்தில் நகரும் இலக்குகளைக்கூட தாக்கும் திறன் உடையது. ஆயுதச் சந்தையில் அதன் விலை இன்றைய நிலைவரப்படி சுமார் 3 மில்லியன் ரூபாய்கள் ஆகும்.



### நிலையான சமாதானத்தை...

மதத் தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் சந்திப்பின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தம் ஒன்றின் போது உயிரிழப்புக்களும், பொருளாதார இழப்புக்களும் ஏற்படுவது சாதாரணமாகும். எனினும் இந்த நாடு குறுகிய காலத்திற்குள் கட்டியெழுப்பபட்டுள்ளது. பல தியாகங்களுக்கு மத்தியில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதானத்தை நாம் நிலையான சமாதானமாக நிலைபெறச் செய்ய வேண்டும்.சமாதானத்திற்கு அநீதி இழைக்க முற்படுவதானது பாரதூரமான குற்றமாகும்" என்றும் அவர் தெரிவித்தார்.

"30 வருட கால யுத்தத்திற்கு பின்பு இந்த நாட்டில் வீதி அபிவிருத்தி, மின்சார அபிவிருத்தி, என பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த நாட்டில் சிங்களவர்கள், தமிழர்கள் முஸ்லிம்கள் பறங்கியர்கள் அனைவரும் ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனைக்கு அமைவாக சுபீட்சமாக வாழ்கின்றனர்" என்றும் அவர் சொன்னார்.

### மேய்ச்சல் தரை....

மேலாக வேளாண்மை செயல்பாட்டில் ஈடுபட்டனர் என்று பல்தரப்பட்டவர்கள் அரசிடம் முறைப்பாடு செய்திருந்தனர். இதன் காரணமாக அங்கு கால்நடைகள் கொல்லப்படுவது உட்பட பல சமூக விரோத செயல்பாடுகள் இடம்பெற்றிருந்ததும் குறிப்பிடத்தகுந்தது.

அவ்வகையில் பிரச்சினைகள் மேலோங்கியதை அடுத்தே கடந்த செவ்வாய்கிழமை பல்துறை அமைச்சுகளின் அதிகாரிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா உட்பட பலர் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று பிபிசி தமிழோசையின் மட்டக்களப்புச் செய்தியாளர் கூறுகிறார்.

போருக்கு பின்னர் மட்டக்களப்பு மாவட்ட கால்நடைகளின் மேய்ச்சலுக்கு என்று சுமார் 50 ஆயிரம் ஏக்கர் காணி என அடையாளமிட்ப்பட்டுள்ள போதிலும் இது வரை வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படாமை தொடர்பாகவும் இந்த கூட்டத்தில் ஆராய்யப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தை அடுத்து இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து அரச துறைகளும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் ஜானக பண்டார அந்தக் கூட்டத்தில் உத்தரவிட்டுள்ளதாக பொன் செல்வராசா பிபிசி தமிழோசையிடம் கூறினார்.

## தடயங்களைத்....

புதைகுழியில் இருந்து தொடர்சசியாக மனித எச்சங்கள் மாத்திரமே மீட்கப்பட்டு வருகின்றன எனவும் பாரிய அளவிலான தடயப்பொருட்கள் எவையும் இது வரை மீட்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். பி.பி.சிக்கு அவர் வழங்கிய செவ்வியில் புதைகுழியில் இருந்து ஆடைகள் எவையும் தற்போது வரை கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## மரண தண்டனை....

துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 2003ம் ஆண்டில் மின்னியலாளராக அங்கு சென்றிருந்த கிருஸ்ணபிள்ளை இரவீந்திரன் என்ற இளைஞனை தனது தனிப்பட்ட தேவைக்காக வாகனத்தில் அழைத்துச் சென்ற போது ஏற்பட்ட விபத்தில் அத் துபாய் நாட்டவர் கொல்லப்பட்டுள்ளார்.

ஆனால் இதனை ஓர் திட்டமிட்ட நடவடிக்கை என்றும் அவர்கள் இருவரிடையேயும் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்தே இக் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும் அரபு ஊடகச் செய்தி தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து 2006ம் ஆண்டிலிருந்து சிறையிடப்பட்ட இரவீந்திரனை மீட்க அவரது குடும்பத்தினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அவருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தண்டனை தொடர்பாகத் தமக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. ஆனால் எப்போது? எவ்வாறு? தண்டனை நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்படவில்லை என்று வேலைவாய்ப்புப் பணியகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இலங்கையின் சனாதிபதி அரபு இராச்சியத்திற்கு பயணம் செய்திருந்த போது இலங்கைக்குடிமகனுக்கு அங்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை பாரதுாரமான விடயம் எனவும் அதற்காக சனாதிபதி வார்த்தைகள் எதனையும் அங்கு உதிர்க்கவில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கா தெரிவித்துள்ளார்.

## திருகோணமலை மாவட்ட பிரதம பிக்கு மரணம்

திருகோணமலை மாவட்ட பிரதம பிக்கு கடந்த 22ம் திகதி மரணமாகியுள்ளார்.

பிரதம குருவான அமரபுர ஸ்ரீ தர்மரத்ன மாகிமியம்கே மகாயகன அங்கனம பண்டித மாலகம தனரத்ன தேரரே மரணமாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அவரது உடல் புத்தமத சம்பிரதாயப்படி திருகோணமலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பிரதம குருவிற்கென எழுந்துள்ள வெற்றிடத்தை நிரப்ப மலித் பண்டித மாகிமியாங் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது

## நான் நிரபராதி....

வெளியானதை அடுத்து மலைமுரசிற்குத் தகவல் தந்த அவர் தான் அவ்வகையான எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்பதுடன் அயலவரான அப் பராயமடையாத பெண்ணின் நல்வாழ்விற்காகவே அவர் மீது அக்கறையுடன் செயற்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் தகவல் தருகையில் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்ட நாளைக்கு முதல் நாள் அப் பெண்ணின் தம்பி வந்து அவசரமாகக் கைத் தொலைபேசியைக் கேட்டதாகவும், வெளி நாட்டில் இருக்கும் தனது மனைவி அழைப்பை ஏற்படுத்துவதால் விரைவாகத் திருப்பித்தருமாறு கூறி தான் கொடுத்ததாகவும், அக் கைத்தொலைபேசியில் இருந்து வேறு ஒரு ஆணுக்கு அப்பெண் தொடர்பை ஏற்படுத்தியுள்ளாரென்றும் தெரிவித்த அவர், தனது கைத்தொலைபேசிக்கு குறுஞ்செய்திகள் வந்தபோதே இவ்விடயம் தனக்குத் தெரியவந்ததாக குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து மறு நாளும் குறுஞ்செய்தி வரவே அதனை அழிப்பதற்காகவும் விடயம் தொடர்பாக விசாரிப்பதற்காகவும் தான் அப் பெண்ணின் வீட்டிற்குச் சென்றதாக தெரிவித்த அவர் அங்கு நடந்த வாக்குவாதத்தில் அப் பதினைந்து வயதுப் பெண்ணின் கையை முறுக்கி அடித்தாகவும் தெரிவித்தார். இவை யாவும் வீட்டு முன்றலிலேயே நடந்தாகவும் தான் வீட்டிற்குள் செல்லவில்லை என்றும் தெரிவித்தார். அதனாலேயே தன் மீது பொய்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் இப் பொய்க்குற்றம் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்த அவர் அங்கும் இதே கருத்துக்களையே கூறியிருந்தார். கிராம மக்கள் சுமார் 26 பேர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த மாதர் சங்க உறுப்பினர் ஒருவர் இவ்விடயம் தமக்குத் தெரியவந்ததை அடுத்து காவல்துறைக்கு இவ்விடயத்தைப் பாரப்படுத்துமாறு ஆலோசனை வழங்கியிருந்ததாக தெரிவித்தார்.

பத்திரிகைக்கு இச் செய்தி எவ்வாறு கசிந்தது என்பது பற்றி தன்னை பலதடவைகள் சிலர் கேள்வி மேல் கேள்வி எழுப்பியதாகவும் அக்கூட்டத்தில் அம் மாதர் சங்க உறுப்பினர் தெரிவித்தார்

இவற்றினை அடுத்து மேலதிக விசாரணைகளுக்காக உரிய திணைக்களங்களுக்கு இவ்விடயம் பாரப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

## சுகிர்தராஜன்....

கைதாகவில்லை.

24.01.2006ம் ஆண்டு 35 வயதான ஊடகவியலாளரான சுகிர்தராஜன் துறைமுக அதிகார சபைக் கடமைக்குச் செலவதற்காக பேருந்துக்காகக் காத்திருந்த வேளையில் அதிகாலை 6 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார். கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்திற்கு மிக அருகில் வைத்துக் கொள்ளப்பட்ட அவர் திருகோணமலையில் நிகழ்ந்த மாணவர் படுகொலையின் புகைப்படமொன்றை வெளியிட்டு அம்மாணவர்கள் சுடுகலச் சூட்டினாலேயே கொல்லப்பட்டதை உறுதிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்க்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மனிதன் அல்லாஹ்வுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய ஓர் அமானிதம்

தொடர்ச்சி..

01. உறங்கும் மனிதன் அவன் விழித்திருக்கும் வரை.
02. ஒரு குழந்தை மெய்தும் வரை.
03. ஒரு சுய நினைவற்றவன் சுய நினைவுக்கு வருகின்ற வரையாகும்.

எனவேதான் பகுத்தறிவும் பொறுப்புடைமையும், மனிதனுக்கு வழங்கபட்ட அமானிதமும் அருட்கொடை யுமாகும். அல்லாஹ் அல்குர் ஆனிலே கூறுகின்றான். மேலும் ஜின்களையும், மனிதர்களையும், என்னை வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை. அத்தியாயம் 51 வசனம் 56 கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் திருப்பொறுத்த த்தோடு சிறந்த வழ்யில் தேடும் வணக்கம் என்றும் மேலானது எவ்வித உலகியல் இலாபங்களும் கருதாது அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுக் கொள்வதற்காக மட்டுமே நாம் தொழுகின்ற தொழுகை, வைக்கின்ற நோம்பு, வழங்கின்ற ஈகை என அனைத்து நற்காரியங்களும் செய்யப்பட வேண்டும்...

உடலில் ஒவ்வொரு உறுப்பும் அதற்கென விதிக்கப்பட்ட வணக்கத்தைச் செய்ய வேண்டி இருக்கின்றது. எடுத்துக்காட்டாக கண்கள் அதனைப் பார்க்க வேண்டுமென கட்டளையிடப் பட்டுள்ளதோ அதனைப் பார்ப்பதன் மூலம் வணக்கம் புரிகின்றது.

இது பற்றி அல்லாஹ் பின்வறுமாறு கூறுகின்றான் நீங்கள் பூமியில் சுற்றித் திரிந்து பொய்யாக்கிக் கொண்டிரு ந்தவர்களின் முடிவு எப்படி இருந்தது என்று கவணித்துப் பாருங்கள்.

அல்லாஹ்வின் படைப் பைக் கவணிப்பதும் அதன் பூரணத்துவத்தை காண்பதும், அவன் வல்லமையை விளக்குவதும், இந்தப் பார்வை புரியும் வணகங்களாகும்.

அதேபோல் காதுகளும் நல்ல விடயங்களை செவிமடுத்து வணக்கம் புரிவதைக் காணலாம். எனவேதான் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். உமக்கு அறிவில்லாததைய் பின் பற்றாதே நிச்சயமாக செவி பார்வை, இதயம் இவை ஒவடவொன்றும் அதனைப் பற்றி மறுமையில் விசாரிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது.

அல்லாஹ் கூறுவதாக நபியவர்கள் கூறுகின்றார்கள். எனது அடியான் தனது உபரியான வணக்கத்தின் மூலம் நான் அவனை விரும்புகின்ற வரை என்னை நெருங்குகின்றான். நான் அவனை விரும்பி விட்டால். அவன் கேட்கும் கேள்வியாகவும், பார்க்கும் பார்வையாகவும், ஆகிவிடுகின்றேன். ஆதாரம் (புகாரி முஸ்லிம்) அதாவது கூறுகின்றான் செல்வமும், புதல்வர்களும், பயனளிக்காத நாளில் பரிசுத்தமான இதயத்துடன்

தொடரும். . .

## இத்தா எதற்கு

தொடர்ச்சி..

இரண்டே வாரங்களில் இன்று சிறுநீரைச் சோதிக்க கர்ப்பம் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்புள்ளது. இன்னும் விவாகரத்துப் பெற்று ஒரு மாதம் மட்டும் இத்தா இருந்தால் போதும் இஸ்கும் கர்ப்பம் பற்றிய விடயம் மட்டுமே முதன்மைப் படுத்தப்பட்ட காரணியாகக் கருதப்பட முடியாது. ஏனெனில் அவள் மாதவிடாய் முடிந்து தூய்மையாகித்தான் தலாக் கேட்க வேண்டிய அவசியமில்லை.


சில காலங்களில் கர்ப்பம் தரித்த உடனேயே பரிசோதனைகள் மூலம் தெரிந்து கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இவையெல்லாம் அல்லாஹ் நமக்குத் தந்த அறிவேயன்றி வேறில்லை இப்படியான அறிவு எமக்குக் கிட்டவிருப்பது இறைவன் அறியாத ஒன்றல்ல எனின் கர்ப்பத்தைக் கனிப்பதற்காக என அல்லாஹத்தஅலா 3 மாதவிடாய் அல்லது 4 மாதம் 10 நாட்கள் என ஒதுக்கியிருக்கமாட்டான்.

எனவே ஏன் 3 மாதவிடாய்கள் அல்லது 4மாதம் 10 நாட்கள் என்பது இன்றைய எமது அறிவைப் பொறுத்த மட்டில் எமக்குப் புரியாத ஒன்றாகவே இருக்கின்றது இதற்கு நிச்சயம் தகுந்த காரநணங்கள் இருக்கும் அல்லாவர் மிக அறிந்தவன்.

நான் கர்ப்பிணியா இல்லையா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும் எனின் நான் 9ன் இத்தா இருக்க வேண்டும்? சம்பிரதாயத்திற்கு 40நாள் இருந்தால் போதாதா என்றெல்லாம் கேட்போர் இது கர்பத்துக்கு அப்பாற்பட்ட விடயம் ஏதோ காரணத்துக்காக அல்லாஹ"த்தஆலா இக்கால கெடுவை ஏற்படுத்தியிருக்கின்றான். ஏன் என்று கேள்விகள் கேளாமல் முற்றிலுமாக அடிபணிதல்தான் எமது கடமை. இதை சமுதாயம் உணர்ந்து கடைப்பிடிக்க வைப்பதும் பர்ணு கிபாயாவாகும்.

இத்தா என்பது துக்கம் அனுபவிப்பதல்ல எனின் தலாக செய்யப்பட்ட பெண்கள் துக்கம் அனுபவிப்பதில்லை ஒரு தகாத திருமணத்தில் இருந்து விடுதலையானதற்கு இன்பம் அனுபவிப்பர் ஆயினும் அவர்கள் இத்தா இருந்துதான் ஆக வேண்டும். அவ்வாறே கொடுமை செய்து துன்புறுத்தி அல்லது பிரிந்திருந்த கணவர் மரணித்தாலும் இத்தா கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே இத்தா என்பது "துக்கம் அனுபவிப்பது" என்ற அர்த்தமல்ல மாறாக இன்னுமொரு திருமணத்தில் ஈடுபடாமல், ஈடுபடக்கூடிய வழி வகைகளுக்கு வழியமைக்காமல் இருக்கும் காலம் தான் இத்தா எனின் கணவனைப் பொறுத்த வரை அவன் தன் மனைவி உயிருடன் இருக்கும் போதே இன்னுமொரு திருமணம் செய்து கொள்ளலாம். எனவே இன்னுமொரு திருமணம் செய்து கொள்வதற்காக காத்து நிற்க வேண்டிய தேவை அவர்களுக்கு இல்லை.

முற்றும்






## பெண்களுக்கான சில அழகுக் குறிப்புகள்



♦ ஒரு முட்டையின் வெள்ளைக் கருவை எடுத்து அதே பச்சை திராட்சை சாறு, எலுமிச்சைச் சாறு, எலுமிச்சைச்சாறு கலந்து முகம், கை, கழுத்து ஆகிய பகுதிகளில் 'பேக்' போட்டு 20 நிமிடங்கள் வரை காயவிட்டு கழுவ வேண்டும். பச்சை திராட்சை சருமத்தை மிருதுவாக்கும், எலுமிச்சைச் சாறு தோலை சுத்தமாக்கும், முட்டையின் வெள்ளைக்கரு தோலை இறுக்கமாக்கும். இது போன்று வாரம் இரு முறை செய்தால் முதுமை தோற்றம் மறைந்து இளமை மிளிரும்.

♦ இடுப்பில் இறுக்கமான ஆடை அணிந்தால் இடுப்பைச் சுற்றி கறுப்புத் தழும்பு ஏற்பட்டு விடும். இதைப்போக்க தழும்பு ஏற்பட்ட இடத்தில் எண்ணெய் தடவி லேசாக மசாஜ் செய்ய வேண்டும். இப்படித் தொடர்ந்து செய்து வர மிகச் சீக்கிரமே தழும்பு நீங்கிவிடும்.

♦ குளிர்ந்த நீர், பசும் பால் இரண்டையும் ஒன்றாகக் கலந்து பஞ்சில் நனைத்து முகத்தில் பூசி அரைமணி நேரம் சென்றதும் முகத்தை மென்மையாக கழுவி பருத்தியினால் ஆக துணியினால் துடைக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வர முகம் கருமை நீங்கி பளபளப்பாகும்.

♦ வரண்ட சருமத்தினர் முட்டையின் வெள்ளைக் கரு, தேன், சோளமா, பாதாம் எண்ணெய் மற்றும் துளி ஜெ[illegible]ம் எசன்ஷியல் ஒயில் என்பவற்றைக் கலந்து முகத்தில் பூசி 15 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவ வேண்டும்.

♦ நெய் உதடுகளில் ஏற்படும் வறட்சியைத் தடுக்கிறது. ஒவ்வொரு நாளும் உதடுகளில் நெய் பூசி வர மென்மையடைவதோடு, நிறமும் அதிகரிக்கும்.

♦ உதடு வறட்சிக்கு வெண்ணெய் பூசியும் மசாஜ் செய்[illegible].

♦ தேனை எலுமிச்சம் சாற்றுடன் கலந்து முகத்தை ஸ்கர[illegible] சருமத்தில் இறந்த செல்கள் நீக்கப்பட்டு முகம் பார்க்க பொலிவுடன் காணப்படும்.

♦ சருமத்தின் பளபளப்பை அதிகரிக்க ஆப்பிள் விழுது, பால் பவுடர், பார்லி பவுடர் பால் கலந்து முகத்தில் தேய்த்து வரலாம்.

♦ ஆப்பிள் விழுது, தக்காளி விழுது, தர்பூசணி விழுது மூன்றையும் சம அளவு எடுத்து, பஞ்சில் ஒற்றியெடுத்து முகத்தில் பூசி வர நல்ல பிரகாசமாகவும், குளுமையாகவும் இருக்கும்.

♦ எடையைக் குறைக்க தினமும் இரவு 15 கொள்ளை நீரில் ஊற வைத்து காலை வெறும் வயிற்றில் அதைச் சாப்பிடவேண்டும். மற்றும் வெண்ணீரில் தேன் மற்றும் எலுமிச்சைச் சாற்றைக் கலந்து சாப்பிட்டு வர உடம்பு எடை குறையும்.

♦ முகத்தை சோப்புப் போட்டு வெதுவெதுப்பான தண்ணீரில் அடிக்கடி கழுவுங்கள். கொழுப்பு நிறைந்த அசைவ உணவுகளையும், நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம், சாக்லெட், பாலாடை போன்றவற்றைத் தவிருங்கள்.

♦ ஆரஞ்சு பழத்தோலை பொடியாக்கி தயிரில் கலந்து முகம், கழுத்து பகுதிகளில் தடவி வர பளிச்சென பிரகாசமாய் சிவப்பழகுடன் மாறி விடும் முகம்.

## வாழ்க்கைப்பாதையில் பெண்களைப் பற்றி

கடந்தவார தொடர்ச்சி

இந்நிலை முற்றிலும் மாற வேண்டும். மாறுவதற்கு நாமனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

நம்மால் மற்றவர்கள் நல்வழிக்கு வர உதவ வேண்டுமேயன்றி, நம் அர்த்தமற்ற பேச்சுக்களால் ஒருவர் தீய வழி செல்ல காரணமாகக் கூடாது.

பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்பது போல், ஒரு பெண்ணைப்பற்றி இன்னொரு பெண் தவறாகப் பேசுவது, கதைப்பது, திருமணத்தின்போது சீதனமில்லாமல் கட்டவேண்டாம் என்று

மகனைக் கூறுவது போன்ற பல விடயங்களை இன்றிலிருந்து விடு த்து, ஒரு பெண் வாழ, நம்மைப் போன்ற வள் நல்வாழ்வு வாழ கைகொடுப்போம். ஒருவர் தவறு செய்தால், இதில் இன் னொரு நபரும் நிச்சயம் சம்மந்தப்பட்டிருப்பார் என்பதை உணராது, அதில் கூட பெண்ணை மட்டுமே தவறாகக் கூறும் நிலையை மாற்றியமைக்க வேண்டும்.

பெண்களால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், வேதனைகளை இல்லாதொழித்தால், ஆண்களால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை மிகச் சுலபமாக இல்லாதொழிக்க இயலும். எனவே, [illegible] கொண்டு நாம் எல்லோரும் செயற்பட்டால், நிச்சயம் பெண்களால் [illegible] எம் சமுதாயம் நல் சமுதாயமாய் நாளை மலரும் என்பதில் ஐயமில்லை.

(ஜெய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவன் கிட்ஸ் ஹோம் - பாலர் பாடசாலை

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)
மட்டக்களப்பு செட்டிபாளையம் சிவன் ஆலய பரிபாலன சபையினால் கடந்த ( 20 ) சிவன் கிட்ஸ் ஹோம் பாலர் பாடசாலை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டபோது சிறார்களையும், அதிதிகளையும், பெற்றாரையும் இராட்சத பண்டா வரவேற்பதையும், பிரதம அதிதிகள் கலந்து சிறப்பிப்பதையும், கிழக்குமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.அமலநாதன் முன்பள்ளி சிறுவர் ஒருவரை உத்தியோகபூர்வமாக பதிவு செய்வதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.






## சர்வதேச விசாரணை சாத்தியமாகலாம்



இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் நடத்தப்படலாம் என இலங்கையின் சிரேஸ்ட ராஜதந்திரிகளில் ஒருவரான தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படக் கூடிய சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி ஒருவரின் ஊடாகவோ அல்லது ஆணைக்குழு ஒன்றின் மூலமாகவோ இலங்கை தொடர்பில் சர்வதேச ரீதியான விசாரணைகள் நடத்தப்படக் கூடிய சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பில் சர்வதேச ரீதியான விசாரணைப் பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட்டு விட்டால் அதனை தடுத்து நிறுத்துவது சாத்தியமாகாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரும்பாலும் இந்த பொறிமுறைமைக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காது என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொள்கைகளை மீறியதாக இலங்கை மீது குற்றம் சுமத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் இது ஆபத்தான நிலைமையாகும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள அமர்வுகளின் போது நேரடியாக இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக் கூடிய அபாயம் இல்லை என்ற போதிலும் உறுப்பு நாடுகள் தனித் தனியாக இலங்கைக்கு எதிராக அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

## கப்பல்துறை வீதியின் நிலை

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)
திருகோணமலை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழுள்ள கப்பல்துறை கிராம பிரதான வீதியானது மிக நீண்ட காலமாக புணரமைக்கப்படாமல் உள்ளது.

வீதியானது குன்றும் குழியுமாக இவ்வாறு காணப்படுவதனால் இப் பகுதிவாழ் மக்கள் நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

இக் கிராமத்தில் 400 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் நாளாந்தம் பயணிக்கும் பிரதான வீதியாக இவ் வீதி காணப்படுவதுடன், இலங்கை விமானப்படை முகாம், பாடசாலை மற்றும் வைத்தியசாலை என்பன இவ் வீதியின் முடிவிலேயே காணப்படுவதால் பொதுமக்கள் உட்பட அனைத்து தரப்பினரும் சுமார் 3 கிலோமீற்றர் நீளமுடைய இவ் விதியினால் நாளாந்தம் பாரிய கஷ்டங்களின் மத்தியிலேயே தமது பிரயாணங்களை மேற்கொண்டு வருவதாகவும் அங்கலாய்க்கின்றனர்.

நாட்டின் பல பாகங்களிலும் வீதி அபிவிருத்தியில் பாரிய மாற்றத்தினை கண்டுள்ள போதிலும் எமது நாட்டின் முக்கிய கேந்திரநிலையமாக கருதப்படும் திருமலையில் உள்ள இவ் வீதியினை மேற்பார்வை செய்யும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரும், பிரதேசத்திற்கு பொறுப்பான அதிகாரிகளும், மாவட்டத்திற்குரிய அரசியல் பிரமுகர்களும் இவ் வீதியினை புணரமைத்து மக்கள் பாவனைக்கு கையளிக்காமல் கவலயீனமாய் இருப்பது ஏன்? எனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.




## வசதியற்ற மாணவர்களுக்கான உதவிகள்




மலர்ந்துள்ள புத்தாண்டில் வசதிகுறைந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களின் மனங்களில் மகிழ்சியூட்டுமுகமாக அண்மையில் மட்டக்களப்பு ஐக்கிய மக்கள் சமூக அபிவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் உ.உதயகாந்த் தலைமையில் திருச்செந்தூர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடத்தில் நடைபெற்ற கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வில் அருளாளர்கள் மற்றும் அதிதிகளை வரவேற்பதையும், நிகழ்வின்போது கிராம அபிவிருத்திச் சங்க செயலாளரினால் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பதையும் படத்தில் காணலாம். (கல்லடி நிருபர்)

## விவேகானந்தா மகளிர் வித்தியாலய 105வது ஆண்டு

மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகானந்த மகளிர் மகா வித்தியாலயத்தின் 105 ஆவது கல்லூரி தினமும் ஸ்தாபகர் தினமும் கடந்த 19.01.2014 ஞாயிற்றுக்கிழமை, காலை 9.00 மணியளவில் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி திலகவதி ஹரிதாஸ் தலைமையில் வித்தியாலயத்தின் ஜோசப் பரராஜசிங்கம் அரங்கில் இடம்பெற்றபோது நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.விமலநாதன் கலந்துகொண்டு உரையாற்றுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வுகள், மாணவர்களின் சத்தியப்பிரமாணம் என்பன நிகழ்த்தப்படுவதையும்.

பெற்றோர், பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள், கல்விசாரா ஊழியர்களென அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டமையினையும் படங்களில் காணலாம்.




## கணனிக் கூடத்தில் கொள்ளை

திருகோணமலை நகரப்பகுதியில் அமைந்துள்ள எம்.ஜ.சி கணனிக் கூடத்தில் கடந்த 20ம் திகதி அதிகாலை கொள்ளை நடந்துள்ளது. இத்துணிகரக் கொள்ளையின் போது கணனிக் கூடத்தின் கண்ணாடிகளை உடைத்து விட்டு உட்புகுந்த கள்வர்கள் அங்கிருந்த மடிக்கணனி, எண்ணியல் புகைப்படக்கருவி, நுண்தகவல் களஞ்சியங்கள் ஆகியன களவு போயுள்ளதாக தெரிய வந்துள்ளது.

காவல்துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து விசாரணைகளை காவல்துறை முடுக்கியுள்ளது. (அனுர-உதய)

## - சமாதான நீதவான் -



பொது மக்களின் பயன்பாட்டிற்கான பணிக்காக நீதியமைச்சர் ரவுப் ஹக்கீமினால் 'இலங்கை தீவு முழுவதிற்குமான சமாதான நீதிவானாக கல்லடி மாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த தெய்வநாயகம் சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நியமன கடிதத்தின் பிரகாரம் அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் வீ. சசிமகேந்திரன் உயர் நீதிமன்ற நீதிபதி ( சிவில் ) முன்னிலையில் சத்திய பிரமாணம் - உறுதியுரை ஆகியவற்றை செய்துகொண்டார்.

(உ.உதயகாந்த்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### "கிழக்கில் முதலிடுவோம்"

# கைத்தொழில் பேட்டைகள் கிழக்கில்



புதிய கைத்தொழில் பேட்டைகளை உருவாக்கும் முயற்சியின் முதற்கட்டம் கடந்த 20ம் திகதி மட்டக்களப்பிபல் ஆரம்பமாகியது.

கிழக்கில் முதலீடு செய்யுங்கள் என்ற திட்டத்தின் கீழ் சுமார் பத்தாயிரம் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் இச் சிறுகைத்தொழில் பேட்டைகளை அமைக்கும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

மாகாண அமைச்சர் ஹாபிஸ் நஷீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்தின் கீழ் முதலாவது கைத்தொழில் பேட்டைக்கான கட்டடத் தொகுதி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் ஐயங்கேணி பிரதேசத்தில் நிறுவப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் சவூதி அரேபியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் முதலீட்டாளர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

மட்டக்களப்பிலும், அம்பாறையிலும், திருகோணமலையிலும் இவ்வாறான கைத்தொழில் பேட்டைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## மாட்டியது சட்ட விரோத மரக்கடத்தல்



(வரதன்)

மணற்பிட்டி அம்பிளாந்துறை ஆகிய இடங்களில் மேற் கொள்ளப்பட்ட வீதிச் சோதனையின போது சுமார் இருநூறாயிரம் ரூபா பெறுமதிமிக்க மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன. மேலதிக விசாரணைகளின் பின் குற்றவாளிகளுக்கெதிராக களுவாஞ்சிக்குடி நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளதாக காவல் நிலையப் பொறுப்பதிகாரி எ.துசார தெரிவித்தார். சார்ஜன் ரத்நாயக்க தலைமையிலான காவலர் குழுவின் திடீர் சோதனைகளின் போதே மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன

## அரசியல்வாதிகளின் அறியாமையே "சர்வதேசம்"



எமது பிரச்சனைகளை நாமே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து சர்வதேசம், சர்வதேசம் என்று செல்வதில் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. எமது பிரச்சினையை எமக்குள் பேசித் தீர்த்துக் கொள்வதே சிறந்த முறையாக அமையும் என மீள்குடியேற்றத்துறை பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகம் தொடர்பான திருத்தச் சட்ட மூலம் குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்தும் உரையாற்றிய 13

### 22ம் திகதி ஜெனீவாவில் மற்றொரு அறிக்கையை வெளியிட்டது ஜெர்மானிய தீர்ப்பாயம்

# "இலங்கையில் இனப்படுகொலை தொடர்கின்றது"

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை ஜெனிவாவில் இன்று வெளியிடப்பட்டது. அதில், இலங்கையில் போருக்கு பிறகும் இனப்படுகொலை தொடர்கிறது என்று கூறப்பட்டுள்ளது என குளோபல் தமிழ்ச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இலங்கையின் இனப்படுகொலைகளுக்கு இந்தியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் உறுதுணையாக இருந்ததாகவும், இலங்கையின் கூட்டாளிகளாக செயல்பட்டதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நிரந்தர மக்கள் தீர்ப்பாய பொதுச் செயலாளர் கியன்னி டோக்னொனி இந்த அறிக்கையை விட்டு பேசுகையில்,

இலங்கையில் போருக்கு பிறகும் இனப்படுகொலை தொடர்கிறது என்று கூறியுள்ள டோக்னொனி, இறுதி கட்டப் போரின்போது ஜனவரி முதல் மே மாதம் வரை பல ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டில் இருந்து தமிழ் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்றும், புலம் பெயர்ந்த தமிழர்களின் இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் பல கட்டங்களாக இனப்படுகொலைகள் நடந்துள்ளதாக கூறியுள்ள அவர், போரின் போது இலங்கை ராணுவத்திற்கு இங்கிலாந்து அரசு ஆயுத உதவிகள் செய்தது என்று தெரிவித்துள்ளார் என அச் செய்தி இணையம் மேலும் தெரிவித்துள்ளது.

## நிலையான சமாதானத்தை குலைக்க முயற்சிப்பது பாரதூரமான குற்றம்


### - கிழக்கில் கோட்டாபய -



கிழக்கிற்கு வருகை தந்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அங்கு உரையாற்றும் போது நிரந்தர சமாதானத்திற்கான காலம் கனிந்து வரும் நிலையில் தெனைக் குலைக்க முற்படுவது பாரதூரமான குற்றம் எனக் கூறியுள்ளார். "நமக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை நாம் பேசித் தீர்த்துக் கொள்வோம். வெளிநாட்டுக்கு சென்று தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது. நமது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்துக்கு யாராவது குந்தகம் செய்வதற்கு முனைந்தால் அது தாய் நாட்டுக்கு செய்யும் பெரிய துரோகமாகும்" என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் கடந் 23ம் திகதி நடைபெற்ற மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின்.... 13

## மேய்ச்சல் தரை குடியேறிகளை விரட்ட நடவடிக்கை - பிபிசி



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசத்தில் போரின் முடிவுக்குப் பின்னர் மேய்சல் நிலங்களாக அடையாளம் இடப்பட்ட பகுதிகளில் சிங்களவர் அனுமதியின்றிப் புகுந்து விதைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கடும் கண்டனங்கள் எழத் தொடங்கிய நிலையில் மேய்ச்சல் தரைகளில் அத்துமீறி விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் மீதே சட்டரீதியிலான நடவடிக்கை எடுக்க காணி அபிவிருத்தி அமைச்சர் ஜான பண்டார தென்னக்கோன் உத்தரவிட்டுள்ளார் என பிபிசி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

மேலும் அச் செய்திக் குறிப்பில் போருக்கு பின்னரான காலகட்டத்தில் அந்த மாவட்டத்தில் அரச காணிகளிலும், வனத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளிலும், வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் அத்துமீறி கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் ...... 13






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org